# சிரித்திரன்

ஸ்கைலாப் சிரிப்பு



**வாகனத்தார்:** உச்சிமீது ஸ்கைலாப் வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை ...

**கங்காணியார்:** நம்ம மெயில் வாகனத்தார் பாரதியின் தம்பி... பயம் தெரியாதவர்.

**வாகனத்தார்:** தார்மீகம் எமது தலைகாக்கும்.. பயப்படாதே ஒய்யப்பங்காணி

**உள்ளுடன்**


- மெயில்வாகனத்தார்.
- சரித்திரம் சிரிக்கிறது.
- செய்திச்சோடி.
- சிறுகதை.
- கவிதைகள்
- இலக்கியச் சிமிழ்
- செய்தி முறுவல்
- ரசப்பொடி
- மகுடி
- குட்டிக்கதைகள்
- முரண் ப(ா)ட்டுக்கள்.



ஆடி-1979

விலை ரூபா: 1-00

உ

## உலகப்புகழ் பெற்ற சோதிடரைக் கேளுங்கள்!



உங்கள்

- விவாகம்
- தொழில்
- ஆரோக்கியம்
- பிரயாணம்
- கல்வி
- தோட்டம்
- சேமிப்பு
- செல்வம்
- பிள்ளைகள்

முதலிய இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு தீர்வுகாண

## சோதிடக் கலாநிதி

# பண்டிட் K. N. நவரத்தினம் A. F. A.

211 நாவலர் வீதி, (இலங்கை) யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| 1. | ஒருவருடப்பலன் எழுத | 50-00 |
| 2. | இரண்டுவருடப் பலன் எழுத | 100-00 |
| 3. | மூன்றுவருடப் பலன் எழுத | 140-00 |
| 4. | ஐந்துவருடப் பலன் எழுத | 200-00 |
| 5. | ஒருசாதகத்தை விரித்து விபரிக்க | 300-00 |
| 6. | ஆயுள் சாதகம் எழுத | 1500-00 |
| 7. | ஆயுள் சாதகம் 30 வயதுக்கு மேற்பட்டவர்க்கு | 1000-00 |
| 8. | குறிப்பு எழுத மாத்திரம் | 25-00 |
| 9. | வெளிநாட்டுக் குறிப்பெழுத மாத்திரம் | 50-00 |
| 10. | ஒரு கேள்விக்குப் பதில் | 40-00 |
| | அதேசாதகத்தில் ஏனைய கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் | 10-00 |

பெயர், பிறந்த திகதி, சரியான நேரம், இடம், ராசி முதலியவற்றுடன் முழுத்தொகையும் அனுப்பவும்.

குறிப்பு: பலன்கள் யாவும் ஆங்கிலத்தில் எழுதப்படும். நாடாமூலம் ஒலிப்பதிவு செய்ய விரும்புவோர் அங்ஙனம் தமிழில் செய்யலாம்.

சிரித்திரன்
செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சிவயம்

# விழாவிற்கிறைத்த பொழுது....

'என்னம்மா இந்த வயதில் அன்னிய நாட்டிற்கு வேலை தேடிப் போகிறீங்க... ஒரு பெண்ணிற்கு இது லட்சணமில்லையே.!' என்று லட்சுமி கரமான நடுத்தர வயதுள்ள அந்தப்பெண்ணைப்பார்த்து எனது நண்பர் ஒருவர் கேட்டார்.

''நீ என்மகளை... சீதனமில்லாமல் கல்யாணம் பண்ணுவியா...? கண்டிப்பாக நீர் அதைச்செய்ய மாட்டீர். உம்மைப்போல் மாப்பிள்ளைகள் சீ த ன ம் கேட்கிறபடியால் எங்க பெண்பிள்ளைகளைக் கரை சேர்க்க அக்கரைச் சீமை போகின்றோம்... 'என கண்டிப்பும், கிண்டலும், கவலையும் கலந்த குரலில் பேசினாள் அந்தத்தாய்.

—நண்பர் அசடுவழிய அமைதியானார்.

சென்ற ஆண்டு மகளிர் ஆண்டு என உலகம் கொண்டாடியது. ஆனால் ஆண்களின் மனதில் ஏதும் மனமாற்றம் ஏற்படவில்லை.

□ □

இவ்வாண்டு சிறுவர் ஆண்டாகக் கொண்டாடப்படுகின்றது.

ஒரு வேலைக்காரச் சிறுவன் எஜமானின் மீதுள்ள பயத்தினால் கிருமிநாசினி குடித்து இறந்த செய்தியையும் இவ்வாண்டில் தான் படிக்கநேர்ந்தது.

விழாக்கள் விழலுக்கு பாய்ச்சிய வீண்நீர் ஆகக் கூடாது. அதனால் ஏதும் நல்ல விளைவுகள் ஏற்பட வேண்டும்.

வள்ளுவன், ஔவை காந்தி எல்லோருக்கும் எமது மண்ணில் சிலை நிறுவி விழா எடுத்தோம். ஆனால் அவர்களின் உபதேசங்களை மனதில் நிலை நிறுத்தவில்லை.

அன்று நான் யாழ்ப்பாண ஆஸ்ப்பத்திரி வீதியால் போகும்போது அந்தப் பெரியார்களின் சிலைகளை பார்க்க நேர்ந்தது. அவர்களின் கைகளிலும் சாதி ஒழிப்புக்கான கறுப்புக்கொடியைக் கட்டி வைத்திருந்தார்கள்.

□ □



அந்தக் காட்சியைப்பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

இவர்களின் இச்செயல்களால் சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் சித்தப்பிரமை பிடித்து விடுமோ எனப்பயமாக இருக்கிறது.

மயில்வாகனத்தார்

ஆடி — 1979

| | |
|---|---|
| நகை | 17 |
| சுவை | 7 |




### பைத்திய உலகம்

எமது முப்படையும் எமது தலையில் ஸ்கைலாப் விழாமல் பாதுகார்க்கப் போகினமாம்.


தலைக்குமேல் சிலந்திவலை பின்னப் போகினமோ!

# சிரித்திரு



இதென்ன இந்தப் பிரமுகருடைய சிலையை மல்லாக்கப்படுத்தி நிறுவியிருக்கிறார்கள்.


ஓ அதுவா. அவர் எல்லாருடைய நட்புறவுக்கும் ஒருபாலம் போல வாழ்ந்தாராம் அதுதான்.



அப்பலோ சர்க்கஸ் பார்த்தீர்களா? பார் விளையாட்டில் தாவிப் பாய்கிறது அற்புதமாக இருக்கிறது.

பூ இதென்ன பாய்ச்சல் நம்ம வடபகுதி மெயில் ரயில் ஓடிக்கொண்டே யிருக்கும் போது எங்க பொடியன்கள் பாய்ந்து இடம் பிடிப்பதை விடவா.

ச. ரா. பா.



நண்பர்: மணப்பெண்ணுக்குஅலங்காரம் பண்ணி மணவறைக்குக் கொண்டு வருவதுக்குள் பெட்ரோல், சீமந்து இரண்டும் விலையேறி விட்டது. அதனால் சீதனம் கூடத்தரும்படி மாப்பிள்ளை வீட்டார் கலியாணத்தில் கலாட்டா பண்ணிவிட்டார்கள்.

நண்பர்; என்ன கோபமாக இருக்கிறீர்கள்.

போத்தல் வியாபாரி: போத்தல்கள் விற்கப்படும் என்று எழுதும்படி பெயிண்ட் எழுதுகிறவரிடம் கூற போத்தல் கள் விற்கப்படும் என்று எழுதிவிட்டான்.



கழுத்திலே ஒரேவலி சுளுக்கி விட்டது. ஒரேயடியாகமேலே பார்த்து.

ஏன்? கலரியில் இருந்து படம் பார்த்தீர்களா?

இல்லை. ஸ்கைலாப் விழுந்து விடுமோ என்றுதான்.

ஆசிரியர் மாணவன் ஒருவனை சீ! மண்டு, சீ! மண்டு என்றுதிட்டிக் கொண்டிருந்தார். மாணவனுக்குக் காது சற்றுச் செவிடு, வீட்டில்போய் தகப்பனிடம் பின் வருமாறு கூறினான். அப்பா! நம்ம வாத்தியார் சீமந்து சீமந்து என்று கேட்கிறார் வீடு கட்டுகிறார் போலிருக்கு.




அடுத்த வீட்டுக்காரன் தனது வீட்டு ஓடுகளை நம்ம வீட்டுத் தேங்காய் விழுந்து உடைப்பதாக வழக்குப்போட்டிருக்கிறான்.

அப்படியா? அவன் வீட்டின் மேல் ஸ்கைலாப் விழுந்தால் என்ன செய்வானும்.



ஸ்கைலாப் என்ற விண்வெளி ஆய்வுக்கூடம் பூமியில் விழும் என்றதைப் படித்தமனைவி கணவனைச் சண்டையின்போது,

'நீ நாசமாப்போக! ஸ்கைலாப் உன்தலையில் விழுந்து சிதறிப்போக' எனத் திட்டினாள்.



கமலா: ஏண்டி உன் கணவன் உன்னை வறுமையில் போட்டு வதைக்கிறரே... அன்னிய நாடுபோய் நாலுபணம் அனுப்பலாமே...

விமலா: அவர் ஒரு சரியான பைத்தியம்... தேசியவாதி...

---

மருமகன்: மாமா...நாங்கள் சவூதி அரேபியா போயிட்டு வாறம்

மாமன்: தம்பி...நம்மமகள் கோபக்காரி, எண்ணெக்கிணற்றுக்குள் குதிச்சாலும் குதித்திடுவாள் பத்திரம்



டாக்டர்: நீ மயங்கி விழுந்ததற்கு காரணம் என்ன?

ஒருவர்: ஒருத்தன் என்னிடம் கடன் வாங்கிப் பவுண் பல் கட்டிவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தான்.

---

மாமன்; நான் சீதனமாகத் தந்த இந்தச்கார் பிடித்திருக்கா?

மருமகன்: தயவுசெய்து இறங்கித் தள்ளுங்க... கார் பெற்ரேல் இல்லாமல் நின்றுவிட்டது.

---




- ● மருமகன் மகளை என்னேடு விட்டிட்டுப் போய்விட்டார்.
- □ ஏன்... ஏதாவது கோவமா?
- ● இல்லை... இராமனை மாரீச மான் கவர்ந்தது போல என் மருமகனை 'ஓமான்' கவர்ந்து விட்டது.

---

ஏணியில் ஏறுவதுபோல் விலைவாசியிலும் ஏறமுடியுமானல்... மனிதன் சந்திரனில் என்றே காலடி வைத்திருப்பான்—

---




தாய்: தங்கச்சி... அப்பாவிற்கு சைக்கிள் ஓடப் பழக்கிவிடு.

மகள்: ஏனம்மா அவர் சைக்கிள் ஓடப்பழகவேண்டும்.

தாய்: இனிமேல் காரில் சந்தோருக்குப் போகக் கட்டாது?

---



ஆயுள்கைதி; உங்களுக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமென்கிறீர்களே எனக்கு வெளிநாடுபோற பலனிருக்கா... சொல்லுங்க பார்க்கலாம்

---

சுவீப் விழுந்திருக்கு அழுகிறியே!

ஸ்கைலாப் தலையில் விழப் போகுதாம்.



கணவன்; உன்னேடு வாழ்வதிலும் ரயில் தண்டவாளத்தில் தலையைக் கொடுக்கலாம்.

மனைவி: சர்க்கஸ் வந்திருக்கு சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுங்களேன்.

---

எனப்பா... கவலை

மனைவி டெலிவிஷன் செட் வாங்கித் தரவில்லை என்ற கோவத்தில் கிணற்றுள் குதித்தாள். இப்போ பல் செட்டும் வாங்கவேண்டியதாக இருக்கு.

## ஜோக்கிரட்டீஸ் ஜோக்ஸ்

# சரித்திரம் சிரிக்கிறது

திக்குவல்

நீ உலகத்தில் முன்னேற விரும்பினால், ஒரேயொரு விடயத்தை மறந்து விடாதே என்றார், இத்தாலிய அரசியல் சாணக்கியன் மாக்கியவல்லி. உனது வாழ்க்கையில் யார், யார் எல்லாம் உனது முன்னேற்றத்துக்கு உதவினார்களோ, அவர்களை யெல்லாம் ஒரேயடியாக ஒழித்துவிடு. இதுவே அவர் காட்டியவழி. தனது அரசன் (Prince) என்ற நூலில் இதை அவர் எழுதிவிட்டுச் சென்றார். இந்தக் கோட்பாட்டை முசோலினி தொடங்கிக் கிட்லர்வரை இறுக்கிப் பிடித்தார்கள் இந்த வரிகள் கொண்ட அப்புத்தகத்தின் பக்கங்களை தலையணைக்குள் வைத்தபடி நித்திரை கொள்வார்களாம் அவர்கள்.

தனது ஆட்சிக்காலத்தில் சாதாரண இராணுவ லெப்டினன்ட் ஆக இருந்த சியாவுல் ஹக்கை இராணுவத் தளபதி யாக்கினார் பூட்டோ. இவர் இராணுவத்தில் பதினோராவது பேர்வழியை முதலாம் இடத்தில் நியமித்த பூட்டோவை, மரணதண்டனைக் கோட்டில் நிற்பாட்டினார் சியாவுல் ஹக்.

மரண தண்டனையை நிறைவேற்றிய மிராசி என்பவர் தான் ஆட்சியில் இருந்திருப்பாரேயானால் இவ்வாறு ஒரு சம்பவத்தை விரும்பியிருக்க மாட்டேன் என்று பேட்டியளித்துள்ளார். பூட்டோவுக்கு மரண தண்டனையை நிறைவேற்றியது என் 'தலைவிதி' என அழுது புலம்பியுள்ளார்.

மரண தண்டனையை நிறைவேற்றிய கூர்க்காவுக்கு இருந்த மனிதாபிமானம் ஆட்சித் தலைவருக்கு இல்லாது போயிற்றே!

சரித்திரம் வேதனையுடன் தன்னைத்தானே பார்த்துச் சிரித்துக் கொள்கின்றது.

## நான்கும் எங்கே?


வானொலியில் ஒரு பெண்ணிடம் கேள்விநேர விவேகப்போட்டியில் பெண்களுக்கு உரிய நான்கு குணங்கள் எவை என்று கேட்கப்பட்டது. அந்தப் பெண்ணுக்குப் பதில் தெரியவில்லை. கொடுக்கப்பட்ட வினாடிகள் கழிந்ததால் பெண் போட்டியில் சித்தி பெறவில்லை. கேள்வி கேட்டவரே அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு விடையைக் கூறினார். ரேடியோவைக் கேட்டுக்கொண்டிருந்த என் நண்பர் 'இப்போ ஆண்களிடம்தான் இது இருப்பதால் அது ஆண்களுக்குத்தான் தெரியும் என்றார்.

—சரவணன்

என்ன கவலையாக இருக்கிறீர்கள்?


வழியில் நடந்து போகும்போது ஒருவன் தள்ளிப் போங்க தேங்காய் பிடுங்குகிறார்கள் தலையில் விழப் போகுது என்றான். சரியென்று தள்ளிப் பாய்ப் பேப்பரைப் படித்தால் ஸ்கைலாப் பூமியில் எங்கேயாவது விழப் போகிறது என்று போட்டுத் தொலைச்சிருக்கு

—சரவணன்



மனைவி; தலைக்குமேல் கடன். அதுக்குக் கவலைப்படவில்லை தலைக்குமேல் ஸ்கைலாப்பென்று கவலைப்படுகிறா.

- உலகே மாயம் வாழ்வே மாயம்... வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்... நாடகமே உலகம் நாளை நடப்பதை யாரறிவார்...
- அண்ணாச்சி என்ன? தத்துவம் பிறந்திட்டுதோ தத்துவப் பாட்டுக்களாகவே வருகுது.
- பிறவாமல் என்ன செய்யும். ஸ்கைலாப் தலையிலை விழப்போகுதாம்.



ஒரு: ஸ்கைலாப் அனுப்பிய விஞ்ஞானிகளுக்கே அது எங்கே விழப்போகுது என்று தெரியாதாம்.

மற்: எங்கள் சோதிடர்களுக்கு பராக்கிரம மூளை. பராக்கிரம சமுத்திரத்தில் விழுமாம்.

ஒரு: தற்கொலை செய்யலாம் என்று பார்க்கிறேன்

மற்: அவசரப்படாதே ஸ்கைலாப் விழட்டும்.

குரு: அப்பனே சீடா! சீக்கிரம் நான் சமாதி ஆகி விடப்போகிறேன் இதைஊர்மக்களுக்குச்சொல்லி ஆகவேண்டியதைச் செய்.

சீடன்: குருவே! இப்போ சீமந்து விலைகூடி விட்டதால் சமாதி கட்டமுடியாதாம். உங்களைக் காட்டுக்குப்போகச் சொல்கிறார்கள்.

---

மணியடித்துச் சிவபூசை செய்வதைப் பரிகாசம் செய்பவனுக்கு மறுபிறவியில் கிடைக்கும் தண்டனை என்ன தெரியுமா?

மறுபிறவியில் அவன் வீதி வீதியாக மணியடித்து ஐஸ்கிறீம் விற்பதற்காக அலைந்து திரிவான்.

—நல்லை ஆதீன ஸ்வாமிநாத தம்பிரான் சுவாமிகள் உரையிலிருந்து

---



காதலி: நான் திடீரென்றுஇறந்து விட்டால் என்ன செய்வீர்கள்.

காதலன்: உன்நினைவாக நான்ஒரு தாஜ்மகால் கட்டுவேன்.

காதலி: பொய் சொன்னாலும் பொருந்தச்சொல்லுங்கள் இப்போ சீமந்து விலைகூடி விட்டபிறகு எப்படிக் கட்டுவீர்கள்.

---

பாடகர் கல்யாணி பாடும்போது தோடி ராகமும் இடையே கலக்கிறதே கவனித்தீர்களா?

அவர் சாப்பிடும் உணவு இப்போதெல்லாம் கலப்படம். அதுதான். — ச. ரா. பா

---

## அப்பாவின் ஆளுமை

என்னுடைய உருவம் என் எழுத்துகளில் பிரதிபலிக்கிறது என்றே நான் நினைக்கிறேன்.

என்னுடைய மிகச் சிறந்த கதை எது வெனில், அதன்மீது என்பெயர் இருக்கக் கூடாது; அதைப் படித்துவிட்டு மக்கள்இது அப்பாவின் கதை! என்று சொல்லவேண்டும்!



# சிரித்திரன் சிறுகதைப்போட்டி

மதிப்புக்குரிய வாசகர்களுக்கு...

'சிரித்திரன்' நடாத்திய சிறுகதைப் போட்டி சம்பந்தமாக சில ஆத்மார்த்தமான கருத்துக்களை, உங்களுடன் உங்கள் உயர்தரமான ரஸிக இதயங்களுடன் பரிமாறிக்கொள்ள 'சிரித்திரன்' விரும்புகிறான்.

சிரித்திரன் சிறுகதைகளுக்கு என்றுமே தனித்துவமான தரமும், கௌரவமும் தாமான அதன் வாசகர்கள் மத்தியில் நிலைத்திருப்பதை சிரித்திரன் அறிவான்.

அது சிரித்திரனுக்கான கௌரவம் மட்டுமல்ல, படைப்பாளிகளின் ஆற்றலுக்கும் கலைத்துவத்திற்கும் கிடைக்கும் மரியாதையும் கூட.

இத்தகைய கௌரவத்திற்கும் மரியாதைகளுக்குமான மூலாதாரம்— உயர்தரமான உங்களின் ரசனை:

இவ்வளவு காலமும் அந்தரங்கமாக இருந்த உங்கள் ரசனையை - பகிரங்கமாக, இதயத்தின் நேரடியான வெளிப்பாடாக தன்னோடு பகிர்ந்து கொள்ள சிரித்திரன் உங்களை அணுகுகிறான்.

நமது சிறுகதைப்போட்டி, பெருமிதத்துக்குரிய திருப்தியை, கர்வப்படக்கூடிய அளவு மகிழ்ச்சியை அளித்திருக்கின்றன, அத்தனையும் வைரங்கள்.

தங்கத்தையாவது உரைகல்லில் தேய்த்து தரத்தை அறியலாம்.

—ஆனால் வைரங்களை?

உங்களின் வைடூரிய இதயத்து ரசனையின் மின்னற் பிரகாசத்தில் தரங்காண விழைகிறான்.

அந்த வைரங்களின் தரம்பற்றிய விமர்சனத்தை உங்கள் கூர்மையான பேனாக் கருவியால் வைரவரிகளாகத்தீட்டி அனுப்புங்கள்.

மிகச்சிறந்த விமர்சனத்துக்கு அன்பளிப்பான வெகுமதியுண்டு அதுமட்டுமல்ல— சிறந்த பரிசுக்குரிய கதையை தேர்ந்தெடுக்கும் பெருமையும் உங்களைச் சாரவுள்ளது அடுத்த இதழ்வரும்வரை காத்திருங்கள்.

—நன்றி—

சிரித்திரன்

லலித்தாவதி — நுவரெலியா

கே: மலையகத்து அரசியல் வாதிகள் பற்றி உமது கருத்து?

ப: லயஞானமுள்ளவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை லயத்தில் அடைத்து வைத்திருக்கின்றார்களல்லவா

□ □

எம். எஸ், பாறூக் — கல்முனை

கே: குடிகாரன் எப்போது கண்ணீர் சிந்துகின்றான்.

ப; மற்றவன் சாராயத்தை சிந்திக் குடிக்கும் போது.

● ●

சீனிவாசகம்பிள்ளை — பரந்தன்

கே: தமிழ்நாடுகளின் இன்றைய நிலை என்ன?

ப; அன்று சீனா அபின் மயக்கத்தில் சீர் அழிந்தது. இன்று தமிழ் நாடுகள் சினிமா மயக்கத்தில் சீர் அழிகின்றது.

□ □

செல்வன் சந்திரவதனன் — வல்வெட்டித்துறை

கே: இவ்வாண்டு சிறுவர் ஆண்டாகக் கொண்டாடப்படுகின்றதே! நன்மை பயக்குமா?

ப: பணக்கார வீடுகளில் வேலைகாரச் சிறுவர்மேல் சுடுநீர் ஊத்துவதற்குப் பதிலாக பசும்பாலா ஊத்துகின்றனர்.



கிருபவதி — மாத்தளை

கே: நீர் தெய்வத்தையா அரசியல் வாதியையா மேலாக மதிப்பது?

ப: அரசியல் வாதியை தேர்தல் காலத்திலாவது எமக்குத்திருக் காட்சி தருகின்றார்களல்லவா

● ●

எஸ். எம். உஸ்மான் — புத்தளம்

கே: தியாகிகளை உலகம் பூசிப்பதற்குக் காரணம் என்ன?

ப: கற்பூரம்போல் ஒளியாகி ஒழிபவர்களாகையால்.

□ □

எஸ், கோமகன் — வவுனியா

கே: நான் எழுத்தாளனாக வாழ வேண்டுமென்று விரும்புகின்றேன் எனக்குக் கூறும் புத்திமதி என்ன?

ப: 'பேனா' காக்கவேண்டும்.

● ●

தில்லையம்பலம் — நுணாவில்

கே: ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்''... இதுபற்றி உமதுகருத்து

ப: அது அன்று. இன்று எண்ணைக்கிணறு இல்லா ஊருக்கு அழகுபாழ்.

□ □

அமிர்தவல்லி — நயினாதீவு

கே: எப்பொழுது வையகம் புனிதமாக இருக்கும்.

ப: மனமாகிய அகம் மனையாகிய அகம் அறிவாகிய புத்தகம் இம்மூன்றும் புனிதமாக இருந்தால்.

● ●

திருவருள்செல்வன் —மானிப்பாய்

கே; ஆத்மசுகம் தருவது எது அபசுரம் தருவது எது?

ப: வீணாகானம் ஆத்மசுகம்தரும் வீண்நா அபசுரம் தரும்.

□ □

எம். ஆடியபாதம்—மட்டக்களப்பு

கே: நீர் யோகாப்பியாசம் செய்வதுண்டா?

ப: பஸ்ஸில் ஆசனம் கிடையாது நொந்து பிரயாணம் செய்து வீடு வந்ததும் சாந்தி ஆசனம் செய்வதுண்டு.

□ □

கலாயோகி — கிளிநொச்சி

கே: சாதி இரண்டொழிய என ஔவையார் பாடினாரே... உமது கருத்துயாதோ.

ப: அவ்விரண்டு சாதிகூட ஒழிய வேண்டும்.

★ ★

செந்தமிழரசி — திருகோணமலை

கே; எவன் தாய் நாட்டிற்கு விசுவாசமானவன்.

ப: விவசாயி. அவன் மண்ணின் மைந்தன்.

□ □

அந்தோனிமுத்துஊர்காவற்றுறை

கே: மனிதன் எதை வெறுக்கின்றானோ அதையே அவன் ஏற்க வேண்டி நிர்ப்பந்தம் ஏற்படுகின்றதே உண்மைதானா?

ப: உண்மைதான் இடுகாட்டிற்கு அருகாமையில் ஒருஅடி நிலம் கூட சொந்தமாக இருப்பதை விரும்பாதவன் இறந்தபின் ஆறடி நிலத்திற்குச் சொந்தக்காரனாகின்றானல்லவா

● ●

இளங்கோ — செங்கலடி

கே: சமுதாயம் கூட்டு வாத்திய இசையாக இனிக்க எது அத்தியாவசியம்.

ப: பொருளாதார சுருதி.

□ □

அம்பிகாவதி — மட்டுநகர்

கே; ஐம்பெரும் காப்பியம் படைத்த தமிழன் கலைஉலகில் என்ன செய்கின்றான்.

ப: கலையுலகில் நோபல் பரிசு பெறாமல் பல்லுடைந்து போயிருக்கின்றான்.



T. விஜித்தா — வத்தளை

கே: ஆபத்தானது எது?

ப: நரம்பில் ஓடா இரத்தமும் நாட்டில் புளங்காப் பணமும்

☐ ☐

தமிழரசி — வல்வெட்டித்துறை

கே: வாக்காளர்கள் என்னசெய்து கொண்டிருக்கின்றார்கள்.

ப; தேர்தலில் ஜெயித்தவருக்கு பன்னீர் பூமாலை சூடிவிட்டு கண்ணீர் பூமாலை தொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்

★ ★

க. தில்லைராசா — நிலாவெளி

கே: இன்றைய தமிழக சினிமாவையும் சஞ்சிகைகளையும் பார்க்கும்போது உம்மனதில் என்ன தோன்றுகின்றது.

ப: நெசவாலைகளில் வேலை நிறுத்தமோ என எண்ணத்தோன்றுகிறது.

☐ ☐

செல்வி. இசைச்செல்வி— நல்லூர்

கே: பணக்காரனுக்கும் கலைஞனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: பணக்காரனின் தேட்டம் அவன் பிள்ளைகளுக்குச்சொத்தாகின்றது கலைஞனின்படைப்பு தேசியச் சொத்தாகின்றது.

★ ★

உமாகாந்தி — சாவகச்சேரி

கே: இலங்கையின் தலைவிதிஎன்ன

ப: அரசியல் அரிச்சுவடு தெரியாதவர்களெல்லாம் அரசியல் வாதிகள்.

☐ ☐

இன்பநாயகம் — மாங்குளம்

கே: சுவையான இலக்கியம் எது?

ப: எழுதிய காதல் கடிதத்திற்கு கிடைத்த பதில்.

சுபைதா — காத்தான்குடி

கே: மகுடியாரே வருங்காலம் பற்றி சோதிடம் கூறமுடியுமா?

ப: கொம்பியூட்டர் சிந்திக்கும் மனிதனின் மூளையில் சிலந்திவலை கட்டும்.

☐ ☐

சின்னராசா — உடுவில்

கே: எவன் அரக்கன் எவன் சண்டாளன்.

ப: சாதிவெறியன் அரக்கன் வயோதிபனிடம் சீதனம் வாங்கும் வாலிபன் சண்டாளன்.

★ ★

தர்மேந்திரன் — விஸ்வமடு

கே; நீர் ரசித்த காட்சி எது?

ப: வியர்வைசிந்தி உழைத்த தொழிலாளியின் நித்திரை

☐ ...

ஈஸ்வரநாதன் — யாழ்ப்பாணம்

கே; பாடசாலை போகும் மாணவிகளைப் பார்த்து பல்லைக்காட்டும் மைனர்கள் பற்றி உமது கருத்து

ப: மூளையைத் தவிர முப்பத்திரண்டும் உள்ளவர்கள்.

● ●

தமிழ்செல்வன் — உரும்பராய்

கே: தமிழனுக்கு ரோசம் உண்டா

ப; அம்மிக்கு உண்டு அடிமேலடி அடித்தால் நகருமல்லவா

★ ★

எஸ். எம் ஹமீட் — மட்டுநகர்

கே; தமிழ் மக்களுக்குள் விஞ்ஞானிகள் இல்லையா?

ப: குடத்தினுள் தீபமாக இருக்கிறார்கள்.

செல்வி உஷா தம்பிராசா
தெல்லிப்பளை

கே: பூமிக்கும் சந்திரனுக்குமிடையில் உள்ள இடைவெளியா அல்லது சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையிலுள்ள இடைவெளியா கூடியது.

ப: இரு தமிழனுக்கிடையிலுள்ள இடைவெளி எல்லாவற்றிலும் கூடியது.

☐ ☐

க. முருகேசு — பளை

கே; ஒருவன் தாழ்வும் உயர்வும் எதனால்.

ப: கல்வியால்ல கட்சியால்.

● ●

ஏ: பரமு — வவுனியா

கே: பெற்றோல் விலைகூடி விட்டதே... இறக்குமதிசெய்யப்பட்ட கார்களின்கதி என்ன?

ப: பாரி வள்ளல் போல் ஏதும் கொடிபடரவிட வேண்டியதுதான்.

★ ★

மங்களேஸ்வரி சுப்பிரமணியம்
புத்தூர்

கே: எமது நாட்டிற்கு மதிப்புத் தேடித்தருவது எது அவமதிப்புத் தேடித்தருவது எது.


ப: மதிப்புத் தேடித்தருவது சிகிரியா ஓவியம். அவமதிப்புத் தேடித் தருவது ரயில் பெட்டிகளில் தீட்டியுள்ள வாசகங்கள்.

● ☐

சி. செல்வராசா — அச்சுவேலி

கே: இன்றைய நவநாகரீக நங்கையர் பற்றி உமது கருத்து.

ப: அவர்களின் அகத்தின் அழகு நகத்தில் தெரிகிறது.



உங்கள் இல்லங்கள்
வசந்த மாளிகையாகத் திகழ

நாகரீகமான...
நவீன பாணிகளிலான...
தளபாடங்களுக்கு

சிறந்த இடம்

## சிற்றி பேணிச்சர்

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சுதந்திரன்

சந்தா விபரம்:

1 வருடம் - 15ரூபா    6 மாதம் - 7-50

தபாற் கட்டளை — காசுக்கட்டளை — காசோலை
யாவும் சி. சிவஞானசுந்தரம் என்ற
பெயருக்கே எழுதவும்.

559 கே. கே.எஸ். வீதி,    யாழ்ப்பாணம்.

ஈழத்தின் இனிய இலக்கிய

மாத இதழ்

மல்லிகை

## தொழில் வழங்கொழிக்க
## தொழில் நுட்ப ஆலோசனைகள்

- கைத்தொழில்களை ஆரம்பிக்க
- அவற்றை நிர்வகிக்க
- ஆரம்பித்த கைத்தொழில்களை விஸ்தரிக்க

எந்திரவியல் பொறி இயலாளரின்
ஆலோசனைகளைப் பெறவிரும்புவோர்

தொடர்பு கொள்ள

மே/பா சித்திரன்
559, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி மார்க்கெட்டிலே....

சகலவித விளைபொருட்களுக்கும்

நாடுங்கள்

## ஆனந்தா ஸ்டோர்ஸ்

மார்க்கெட்,    கிளிநொச்சி

## குருபீடம்

குரு தன் சீடர்களைப் பார்த்துக் கேட்டார்.

''உலகில் நிலையானது எது?''

அவரது நான்கு சீடர்களும் நான்கு திசைநோக்கிச் சென்றார்கள்

சிலகாலங்களின் பின் ஒரு குறிப்பிட்ட நாளில் நால் வரும் குருவிடம் திரும்பி வந்தார்கள்.

''உலகில் நிலையானது எது என்று கண்டுபிடித்து விட்டீர்களா?'' என்றார்குரு. மூவர் 'ஆம்' என்று தலையசைத்தனர்.

ஒருவன் மௌனமாக நின்றான்.

அந்த ஒருவனை ஆழமர்க ஊடுருவிப் பார்த்த பின்னர் மற்றவர்களை வரிசையாகக் கேட்டார் குரு.

முதல் சீடன் சொன்னான் ''ஒருவன் செய்யும் தர்மம் தான் நிலையானது'' என்று அதற்கு நீண்ட விளக்கமும் கொடுத்தான்.

அடுத்தவன் ''புகழ்'' தான் நிலையானது என்று ஆதாரம் காட்டினான்

மூன்றாமவன் ''கல்வி'' தான் நிலையானது ஏழேழு பிறப்பிற்கும் உதவுவது என்றான்

மௌனமாக நின்ற நான்காமவனை பார்த்தார் குரு.

குருவை வணங்கிவிட்டுச் சொன்னான்- ''உலகமே நிலையற்றது''.

குரு எழுந்து தன் பீடத்தில் அவனை இருத்திவிட்டு வெளியேறினார்.

## சங்கமம்

தோட்டத்தில் அந்தஇரு வாழைகளும் அருகருகே காய்த்து குலைதள்ளி நின்றன. ஒன்று பழுத்திருந்தது மற்றது காய்ப்பதமானது.

ஒரே கிராமத்தைச் சேர்ந்த அயல்வீதி வாசிகளான இருவர் அத்தோட்டத்திற்குச் சென்று அந்த வாழை மரங்களை விலைபேசிக் கொண்டனர் தோட்டக்காரனிடம்.

ஒன்றாக வளர்ந்த அந்த வாழைகள் பிரித்து பெயர்த்தெடுக்கப்பட்டு இருவேறு நிகழ்ச்சிகளுக்கு கொண்டு செல்லப்பட்டன.

ஒன்று மண நிகழ்ச்சிக்கு—

மற்றது மரண நிகழ்ச்சிக்கு—

இரண்டு தினங்களின் பின்னர் இருவீதிகள் சந்திக்கும் அக்கிராமத்துக் குப்பை மேட்டில் குலைபிடுங்கப்பட்ட இரு வாழைமரங்களும் மீண்டும் சந்தித்துக்கொண்டன. ஒன்று மற்றதிடம் சொல்லியது

''எப்படி வாழ்ந்தாலும் முடிவு ஒன்றேதான்.''

## ஆவி துடிக்குதடி

அபிலாஷைகள் நிறைவேறாமல் இறந்துவிட்ட இருவரின் ஆவிகள் ஓர் ஆலமரத்தில் இருந்தன.

அந்த வீதி வழியே ஓர்நீண்ட ஊர்வலம் சென்றது.

அது இறந்துபோன ஒரு கவிஞனுக்கு எடுக்கும் விழா ஊர்வலம்.

ஒரு ஆவி மற்றதிடம் சொன்னது.

''இந்த மனிதர்கள் கொடியவர்கள், போலித்தனமானவர்கள்...''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்'' என்றது மற்றது.

''இந்த சமூகம் மதிக்காததால் நல்லிதயம் கொண்ட அந்த கவிஞன் மனமுடைந்து தற்கொலைசெய்து கொண்டான். அவனது மனைவியும் பிள்ளையும் இருக்க இடமின்றி வீதியில் கிடக்கிறார்கள். இவர்கள் தங்கள் புகழுக்காக விழா எடுக்கிறார்கள்... போலிகள்...''என்றது முதல் ஆவி.

''உனக் கெப்படி இதெல்லாம் தெரியும்'' என்றது மற்ற ஆவி

''உயிரோடு இருக்கும் போது இந்த மனிதர்களால் அணு அணுவாக சித்திரவதைபட்டு தற்கொலை செய்து கொண்ட பின்னரும் இப்படி பொலித்தனமான செயல்களால் ஆத்மவேதனைப்படும் அந்தக் கவிஞன் தான் நான்...''

—என்றபடி அழுதது அந்த முதல் ஆவி.

## போக்கிடம்

''உலகை ஆக்கவும் அழிக்கவும் வல்லது எது''?

''ஆண்டவன்'' என்றான் ஆத்மீக ஞானி

''அன்பு'' என்றான் மனிதாபிமானி

''அணு'' என்றான் விஞ்ஞானி.

மூவர் கூற்றையும் தர்க்கித்து ஆராய மேதாவிகள் பலர் கொண்ட ஒருகுழு ஒன்று கூடியது.

தர்க்க ஆராய்வின் முடிவில்—

மேதாவிகள் அனைவரும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

---

● எவனொருவன் தன்னலம் மறுத்து மனிதகுலத்தின் ஒருபிரிவின் மீதோ பலபிரிவுகளின் மீதோ துவேஷம் வளர்க்காமல் பொதுவான மனித குலத்தின் வளர்ச்சிக்கும் உன்னத வாழ்க்கைக்கும் பாடுபடுவதற்குத் தானோர் உதாரண புருஷன் என்றலட்சிய வேட்கையோடு செயலாற்றுகிறானோ தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொள்கிறானோ அவன் அந்த அளவில் மனித இதயங்கொண்டோரின் மரியாதைக்குரிய முற்போக்கு வாதியாவன் —ஜெயகாந்தன்

● சிறுகதை

மூலம்: முல்க்ராஜ் ஆனந்த்

தமிழில்: ரம்யா

# ஒரு வெறும் மனிதன்

நாங்கள் ஏழுபேர் இருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் ஆறுபேர் என்பதில் ஏதும் தவறில்லை. எங்களில் ஏழாம் ஆசாமி இருக்கிறானே. வெறும் மனிதன் மட்டும்தான்.

நாங்கள் ஆறுபேர் சொல்லுவதையும் அப்படியே திருப்பிச் சொல்லுவான். செய்வதை அப்படியே திருப்பிச் செய்வான்.

யார்யாரோடெல்லாம் நாங்கள் தொடர்பு கொள்ளலாம் என்று நாம் யோசித்துக் கொண்டிருப்போம்.

ஒருமாதிரியாக நித்திரை கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்பதற்காக அவன் நித்திரையோடு போராடிக் கொண்டிருப்பான்.

நல்லதோ, கெட்டதோ நாங்கள் சொல்லுகின்ற வசனத்தில் கடைசி வரியை அப்படியே அவன் திருப்பிச் சொல்லுவது...

அப்படியே தொடர்ந்து சொல்லுவான்.

''பயமென்பது சிறிது கூடினால் கவலையாகிறது...'' நான் சொன்னேன்.

''பயமென்பது சிறிது கூடினால் கவலையாகிறது...'' அவன் அப்படியே தொடர்ந்தான்.

காரியதரிசி ஒருநாள் சொன்னான் ''மனிதன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற அளவுக்கு நாங்கள் ஒவ்வொருவரும் வாழ வேண்டும்...''

எங்களின் ஏழாவது அப்போது சொன்னான்—

''மனிதன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற அளவுக்கு நாங்கள் ஒவ்வொருவரும் வாழவேண்டும்''.

—அவன் வெறும் 'ஆமாம்' காரன் என்றில்லை.

தனது சொந்தவீடு - அம்மாவின் அரவணைப்பு - அப்பாவின் மிரட்டல் எல்லாவற்றையும் அவன் ஒழுங்கை வழியே நடக்கும்போது நினைவுக்குக் கொண்டுவருவான்.

தனித்துப் பார்ப்போம் அவனை— அவன் மிக அழகானவன்.

இரக்கமில்லாததை ஈடுசெய்வது போல் உயரமான தோற்றம்

ஒடுங்கியமார்பு ஆனாலும் திரண்ட தோள்கள்.

சிறுநெற்றிதான் என்றாலும் மங்கலான சந்திரன்போன்ற முகத்தோற்றம் ஒழுங்கான மூக்கு — குவிந்த உதடுகள்.

பெருந்தன்மையை அவன் எவ்வளவுதான் மறைந்து வைத்திருந்தாலும் அவனது கண்களில் அது நிறைந்து நிற்கும்.

அவனுள்ளே ஓர் விஷமத்தனம் இருக்கத்தான் இருக்கிறது.

ஏதோ பயமும் இருக்கிறது.

மனம் முரட்டுத்தனமாக இருந்தாலும் அவனது முழுத்தோற்றமும் அப்படி யொன்றும் தீங்கு விளைவிப்பதாய் இல்லை.

—எங்களை பொலிசுக்கு காட்டிக் கொடுக்க அவனது விசமத்தனம் உதவியிருக்கிறது—!

லாகூரில் நாங்கள் வசிக்கும்வீடு அவனது மேன்மைக்குரிய சரம் ராஜ்யத் தலைவருக்கெதிராக நாங்கள் தீட்டுகின்ற திட்டம்—எல்லாம் விளக்கமாக அவன் பொலிசுக்குச் சொல்லிவிட்டான்—

தகவல் கொடுத்துவிட்டான் எவனை ஒரு அறிவீனனாக, வெறும் மனிதனாகநாங்கள் நினைத்தோமோ அவனை எங்கள் விதியையே நிர்ணயிப்பவனாக நினைக்கின்ற காலம் இது.

—அன்று

பொலிஸ் திடீரென்று அதிகாலையில் வந்து எங்களை திகில்ப்படுத்தியபோது எதையுமே நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லையே!

—நல்ல சந்தோசமான தூக்கம்

கண்களைத் துடைத்தபடி பெருமூச்சுத்தான் விடமுடிந்தது.

உடனே சரண் அடைந்து விட்டோம். ''நாங்கள் குற்றவாளிகள் அல்ல'' என்பதுதான் எங்கள் வழக்குவிவாதம்.

—கோபால்,—

எங்கள் சேனையின் ஏழாவது ஆசாமி—முதலில் திகில் அடைந்ததாக தெரியவில்லை.


ஆனால் - பின்பு அவன் அழவே ஆயத்தமானான்.

படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தவுடன் திகிலில் ஒரு குட்டிக்கரணம் அடித்தான். பின்பு மெல்லிய அசைவுகள் தெரிந்தது. வாய

---

## ஒருசாதி ஆள்...

அவர்—
சாதி—சமயம் பார்க்கார்
சன்மார்க்கவாதி—
தன் வீட்டில்...
கண்ட சாதி—
நாய் வளர்த்தால்
மரியாதைக் குறைவென்று...
உயர் ஜாதி நாய்க்கு
'ஓடர்' கொடுத்துள்ளார்.



ஒரு: பனைமரம் அநாகரீகமான மரமென்று தறித்தீங்களே!
மற்: ஏன்... இப்போ என்னவந்திட்டுது.
ஒரு: அந்த அநாகரீகமான மரம் உங்க நாகரீகமான டெலிவிஷன் ஏரியல் கட்ட உதவுமல்லவா!
மற்; ! ! ! !

---

டியில் நுரை காணப்பட்டது. ஆண்டுக்கணக்காக சிந்தனையிலே கவிழ்ந்து போயிருந்த தலைநிமிர்ந்தது, தலையை இறுக்க ஆட்டினான் பொலிஸின் பிடியிலிருந்து மூன்று நான்கு முறை முரட்டுத்தனமாக திமிறியபின் ஒருமாதிரியாக படுக்கையில் அவனைக் கிடத்தினோம்.

இரக்கமாகவும், கெஞ்சியும் மிரட்டியும் எவ்வளவுதான் சமாதானத்துக்கு கொண்டுவர முயன்றாலும் அவன் படுக்கையில் இருந்து எழுந்துவிட்டான்.

வாயில் நுரை மீண்டும் வந்தது.

பற்களை நெருமியபடி அவன் தரையில் கிடந்தான்.

ஒருவேளை காக்காய் வலியாகவும் இருக்கலாம். எங்களுக்கு பயமாக இருந்தது.

ஆனாலும் பொலிஸ்காரர் அவனை முரட்டுத்தனமாக நிமிர்த்தினார்கள். அவனது பிடிவாதத்தை அவர்கள் சுட்டிக் காட்டித்திட்டினார்கள்.

பொலிஸிற்கு உபயோகமாகும் வார்த்தைகளால் எங்களை நோக்கித் திட்டினான்.

அவர்களது இரக்கத்தையும் மன்றாடி வேண்டிக் கொள்ளத் தவறவில்லை.

'நீங்கள் நன்றாய்த்தான் திட்டம் போட்டிருக்கிறீர்கள்... நாளைக்கு அரசாங்கம் எங்களுக்கு தூக்குத் தரும் என்று தெரியாமலேயே இருந்திருக்கிறீர்கள். சுதந்திரம்! விடுதலை, இது உங்கள் வெறும் பேச்சு. நீங்கள் எந்தச்சனங்களைப் பற்றி யோசித்தீர்களோ அதுகள் கொடுமையானதுகள். நாட்டுப்புறத்து விழல்கள்—எதையும் ரசிக்கத் தெரியாததுகள்.

அவன் திட்டினான்.

வாயைமூடு...சரியான பூர்ஷுவா மடையன்... எங்களில் ஹறான்ஸ் திருப்பித் திட்டினான்.

''ஓ... சட்டத்தை மாற்றுவதில் நீங்கள் பெரிய கெட்டிக்காரர் என நினைத்திருக்கிறீர்கள்...நான் முழுமடையன்...உங்களிடம் அகப்பட்டேனே இரக்கத்தைக் காண உங்களுக்கு துணிவில்லை... பேய்கள்... தீர்ப்பு நாளுக்காக காத்திருக்கிற பொய்ப்பிரசாரகர்கள்...

—அவனே திட்டினான்;

''உனக்கு விசர்பிடித்துவிட்டது'' நாங்கள் அலைவனை உண்மையை உடைக்க அனுமதிக்க வேண்டியதாயிற்று.

வழக்கில் நாங்கள் வென்றுவிடுவோம் என்றுதான் நினைத்தோம் ஆனால் அவன் சரியான நேரத்திற்கு சரியான புன்னகை புரிந்து அழுது. சிரித்து, கோபித்து அந்த நாளில் நாங்கள் சொன்ன ஒவ்வொன்றையும் திருப்பிச்சொல்லி எங்களை பிடித்துக் கொடுக்கவே முனைந்தான்.

ஒருவருடமாக நாங்கள் மறைந்திருந்து திட்டம் தீட்டியதற்கோ பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததற்கோ—
எந்தவித சாட்சியமும் இல்லாவிட்டாலும் எங்களுக்கு எட்டுவருட அடிமைத்தண்டனை தீர்ப்பாயிற்று

தீர்ப்பின் இறுதிவரிகள் எங்களை அதிகம் ஆட்டிவிட்டது.

எங்கள் நண்பர்கள் அப்பீல்கோருவார்கள்—என்பது நமது நம்பிக்கை, பிடிபடும்போது நடந்து கொண்டமாதிரி கோபால் நடந்து கொள்ளவில்லை.

அமைதியாக நின்றான்—

இனிமேல் ஒருவரையொருவர் சந்திக்காமலே போய் விடுவோமே என்கிற பயத்தில் நாங்கள் ஆறு பேரும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டோம்.

எங்களை நெருங்கி கால்களில் விழுந்துவணங்கி தூசுகளையெல்லாம் துடைத்தான கோபால்.

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். சகோதரங்களே...''

''மன்னிக்க என்ன இருக்கிறது'' நாங்கள் அவனைதூக்கி நிமிர்த்தினோம்.

எப்போதும் போல் பழையதொனியில் நாங்கள் சொன்ன கடைசி வரியை அவன் திருப்பிச்சொன்னான்.

''மன்னிக்க என்ன இருக்கிறது''

## எல்லாம் கிறுக்குகள்!

கவிஞனின் கிறுக்கல்கள் கவிதையாகும்.
ஓவியனின் கிறுக்கல்கள் ஓவியமாகும்
அரசியல் வாதியின் கிறுக்கல்கள் சட்டங்களாகும்
ஆண்டவனின் கிறுக்கல்கள் தலையெழுத்தாகும்.

அழகுக் கலைக்கோலம் தரும்
அற்புதப் புடவைத் தினிசுகளுக்கு

ஒப்பற்ற இடம்
**சிங்காரம்ஸ்**

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு
## டைமா நகை மாளிகை

செட்டியார் தெரு,
தொலைபேசி: 20875. கொழும்பு

யாழ்நகரிலே

சகலவித விளைபொருட்களும்
சாய்ப்புச் சாமான்களும்
சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற
விஜயம் செய்யுங்கள்

## செ. ஆ. செல்லையா அன் கோ

110, ஆஸ்ப்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி; 7010

அதிக சுவைக்கு அண்ணா கோப்பியே!
அண்ணா கோப்பிக்கு நிகர்!!
அண்ணா கோப்பியே!!!

## அண்ணா கோப்பி
## தொழிலகம்

இணுவில் தொலைபேசி; 7412

எங்களிடம் சகலவிதமான
- அழகு சாதனப் பொருட்கள்
- தையல் நூல் வகைகள்
- பிறந்தநாள் பரிசுப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- லேஸ் வகைகள்
- விளையாட்டுப் பொருட்கள்
- பீங்கான் வகைகள்

இன்னும்பல பெற்றுக்கொள்ளலாம்.

## இந்திரன்ஸ்

இல. 27, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

**மில்க்வைற் அப்பியாசக் கொப்பி**

100 மில்க்வைற் நீலசோப் அல்லது
25 மில்க்வைற் பார்சோப் அல்லது
10 மில்க்வைற் 1ரு பெட்டி சலவைப்பவுடர்
அல்லது
50 நியூ மில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி மேற்படி
**அப்பியாசக் கொப்பியை**
பெற்றுக் கொள்ளுங்கள்

## மில்க்வைற் யாழ்ப்பாணம்

கிளை: 79, மெசஞ்சர் வீதி, கொழும்பு -12
தொலைபேசி: 36063 தொலைபேசி: 7233



# [illegible]

ஆறு கோவில்களுக்குப்பூசை பண்ணிச் சீவனம் நடத்துபவர் சர்மா. அவர் குடும்பம் குசேலர் குடும்பம் மாதிரி பத்துப் பிள்ளை கள். பள்ளிக்கூடம் போகும் வளர்ந்த மகன்மாரும் பெண்களும் வீடுநிறைய இருக்கும். மற்றக் கோவில்களில் அவருக்கு அவ்வளவு பிரச்சனை இல்லை. அந்த அம்மன் கோவில் மட்டும்தான் அவருக்குப் பிரச்சனை. தர்மகர்த்தாக்களுக்கு அவர் அடங்கி நடக்கவேண்டும். சம்பளம் ஐம்பதுரூபாதான். அன்றும் வழக்கம்போல சைக்கிலில் சர்மா வந்து கோயிற் கதவைத் திறந்தார். ஐயா ஒரு விஷயம் என்று தர்மகர்த்தாசபை உறுப்பினர் ஒருவர் வந்து ''இன்று மாலை நிர்வாகசபைக் கூட்டம் நடக்கப் போகிறது. உங்கள் சம்பளம் விஷயமாகவும் ஆலோசிப்போம் கூட்டத்துக்கு வாருங்கள் அதுபோக இங்கே வெளிமண்டபத்தில் ஒரு பிச்சைக்காரன் தினமும் படுக்கிருனும். திண்டத்தகாதவன் என்றும் பேசிக்கொள்கிருர்கள். குன்பாட்டில் சினைற்றில் தண்ணீர் அள்ளுகிருனும். அவனை இங்கே படுக்க விடாதீர்கள். எல்லாம் நீங்கள் கொடுக்கிற இடம் என்று கூறிக்கொண்டேயிருந்தார் சர்மா குறுக்கிட்டு அவனுல் ஒரு தொல்லையுமில்லை. கோயில்வீதி அவனுல்தான் சுத்தமாயிருக்கிறது இல்லாவிடில் செடிகள் முளைத்துக் காடாகிவிடும் என்ருர். உறுப்பினரான அவருக்கு அதை ஏற்கமனமில்லை. இனி அவன் படுக்கப் படாது. வேண்டுமானுல் சம்பளத்துக்கு ஆளைப்போட்டுச் செய்யுங்கள் பணம் தரலாம் என்று விட்டுப் போனுர். சர்மாமறுவார்த்தை பேசவில்லை.

அந்தப் பிச்சைக்காரன் வழக்கம் போல் வேலைகளைச் செய்து விட்டுப் படுக்க வந்தான். சர்மா ஒரு பட்டைச் சாதத்தை நீட்டிய படி 'இந்தாப்பா முத்தையா உன்னை இங்கே படுக்கவோ தங்கவோ கூடாது என்று சொல்லிப் போயிருக்கிருர்கள் என்ருர். முத்தையா ஒன்றும் பேசவில்லை, சர்மா மீண்டும் தொடர்ந்தார் எனது சம்பள விஷயமாகப் பேசும்போது நீ இங்கு தங்குவது பற்றியும் பிரஸ்தாபிப்பார்கள் போலிருக்கிறது எனவும் முத்தையா அவ்வளவு தூரம் இதைக் கூட்டத்துக்குப் போறவரை விடமாட்டேன் இன்னைக்கு சாயங்காலம் போய் விடுவேன் என்று கூறிவாய் மூடவும் கோயில் சபை உறுப்பினர் மீண்டும் அங்கே தோன்றினுர். முத்தையாவைக் கண்ட அவருக்குப் பற்றிக்கொண்டுவந்தது. 'இந்தாடா இனிமேல் நீ இங்கே படுக்கப்படாது. அப்படிப் படுத்தது

ச. ரா. பாலகிருஸ்ணசர்மா

கண்டால் தலையில் தண்ணீரை ஊற்றுவோம். ஐயா, மண்டபத்தில் தினமும் தண்ணீரை ஊற்றி விடுங்கள். மற்றது என்னவென்ருல் இந்தியாவால் பக்கத்து ஊர்க் கோவிலுக்கு இரண்டு லட்சம் ரூபாவில் தேர்செய்ய ஒருஸ்தபதி குழுவுடன் வந்திருக்கிருர். எங்கள் கோயிலுக்கும் ரதம் ஒன்று செய்யத் தீர்மானித்து விட்டோம். பத்து ரூபா, ஐந்துரூபா, இரண்டு ரூபா என்று டிக்கட் புத்தகம் அடித்திருக்கிறோம், இந்தாருங்கள் ஐந்து புத்தகம். உங்கள் பிள்ளைகளிடம் கொடுத்து விற்கச் சொல்லிப் பணத்தைப் பிறகுதாருங்கள்'' என்று சர்மாவிடம் கொடுத்தார். முத்தையா இடையில் ''ஐயா இந்தஅம்மாளுக்கு நானும் முடிந்த நிதியைத் தருகிறேன்'' என்றதும் அந்த உறுப்பினருக்கு. மீண்டும் பற்றியது. என்னடா நீ எங்களுக்கு நிதி தரப்போகிருயா படுக்க இடம் இராத நீ பணக்காரப்பிரபு என்று நினைப்போ'' என்று கிண்டலாக ஏசினுர். முத்தையா ஏதோ சொல்லவாயெடுத்தான். அவனைப் பேசவிடாது ஏசிய அவர் சர்மாவிடம் விடை பெற்றுப்போனுர். அன்று மாலை கூட்டம் நடந்தது. சர்மாவுக்கு இருபது ரூபாதான் கூட்டினுர்கள்

மறுநாள் இரவு சர்மாவின் வீட்டுக்கு முத்தையா வந்துசேர்ந்தான். சர்மா அ[illegible]னக் [illegible]ண்டதும் திடுக்கிட்டார். முத்தையா அவரைப் பார்த்துக் குபபிட்டு ''ஐயா நீங்கள் நினைக்கிறபடி நான் இங்கே தங்க வரவில்லை. உங்களுக்கு என்னுல் கஷ்டம் வராது. நான் அடிக்கடி சுவீப் வாங்குபவன் எனது சுவீப் டிக்கட்டுக்கு லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது. எனக்கு இவ்வளவு தொகைவேண்டாம். பாவம் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள். இதற்குரிய பரிசை நீங்களே எடுத்து ஒரு பகுதித்தொகையை அம்மாளின் தேர்த்திருப்பணிக்கும் கொடுத்துவிடுங்கள். வீணைப் பிள்ளைகளை வருத்தி அலையச்செய்து திருப்பணி டிக்கட்டுகள் விற்கவேண்டாம்'' என்று பலவந்தமாக சர்மாவின் கையில் சுவீப் டிக்கட்டைக் கொடுத்து விட்டு இருளில் மறைந்து கொண்டிருந்தான். சர்மா அவனையே பார்த்தபடி நின்ருர்.

---

மனைவி; என்ன கவலையாயிருக்கிறீங்கள்.

யமன்: பெற்ரேல் விலைகூடியதால் பூலோகமிருந்து நம்ம லோகத்திற்கு ஒரு தரும் வரக்காணுேமே!

Don't Read

உங்கள் தேவைகள் எதுவானுலென்ன?
இன்றே விஜயம் செய்யுங்கள்
யாழ்நகரில் சகலவிதமான

சாய்ப்புச் சாமான்களுக்கும்
மலிவாகவும் உத்தரவாதத்துடனும்
கிடைக்கும் ஒரே இடம்

ராஜூ ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 372 தந்தி; ''ருஜூ''

# எப்படிப்பாடினரோ

**இயற்கை**

மண்குடிசை வாசலென்ருல்
தென்றல் வர மறுத்திடுமா?
மாலை நிலா ஏழையென்ருல்
வெளிச்சம் தரமறுத்திடுமா?

—வாலி

**வர்க்கங்கள்:**

பொன்னகை அணிந்த மாளிகைகள்
புன்னகை மறந்த மண்குடிசை
பசிவர அங்கே மாத்திரைகள்
பட்டினியால் இங்கு யாத்திரைகள்...

—கண்ணதாசன்

**ஏழ்மை:**

பெற்றவள் உடல் சலித்தாள்
பேதை நான் கால் சலித்தேன்
படைத்தவன் கைசலித்து ஓய்ந்தானம்மா
மீண்டும் பாவியொரு தாய்வயிற்றில் பிறவேனம்மா

—கண்ணதாசன்

**உழைப்பு:**

சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலமை...
அந்தச் சாமி மறுத்தாலும் பூமிதந்திடும்
தகுந்த பலனை...

—பட்டுக்கோட்டை

**துயரம்:**

கண்ணீர் உப்பிட்டு காவேரி நீரிட்டு
கலயங்கள் ஆடுது சோறின்றி...
இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி...

—கண்ணதாசன்

**விடிவு;**

மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே—பசி
வந்திடக்காரணம் என்ன மச்சான்?
அவன் தேடிய செல்வங்கள் வேறு இடத்தில்
சேர்வதனுல் வரும் தொல்லையடி?
பஞ்சப் பரம்பரை வாழ்வதற்கு—இனி
பண்ண வேண்டியது என்ன மச்சான்?
தினம் கஞ்சிகஞ்சி யென்ருல் பானை நிறையாது
சிந்திச்சு முன்னேற வேண்டுமடி.

—பட்டுக்கோட்டை

---

**வக்கரிப்பு:**

''என்னை நாகரீகம் என்று சொக்கி இருந்தவர்கள்
டெலிவிஷன் வந்தபின்பு என்னை அநாகரீகமாம்!''




- பொருளாதார சுதந்திரமே உண்மையான சுதந்திரம் அதனைப் பெறுவதற்காக உழைக்கவேண்டும். —பிரதமர்

- இலங்கைக்கு 1100 கோடி ரூபாய் வெளிநாட்டு கடன்வசதி கிடைக்கவுள்ளது. —செய்தி

- வைபவம் ஒன்றிற்குச் செல்ல கணவன் அனுமதிக்காததால் மனைவி தற்கொலை. —செய்தி

- தான் ஆசையோடு வாங்கிவந்த சேலையை உதாசீனம்செய்து மனைவிகட்டமறுத்ததால் மனமுடைந்த கணவன் நஞ்சிடம் தஞ்சம். —செய்தி

- பிராமணர் உட்பட அநேகர் சிகை அலங்காரத்தில் ஈடுபட்டனர். கோப்பாய் எம். பீ இயக்கத்தை ஆரம்பித்தார். —செய்தி

- 'பீக்கிங்'கில் முடிதிருத்தும் வேலைக்கு 2500 இளைஞர் விண்ணப்பம் செய்துள்ளனர். —செய்தி

- ஈரான் மன்னர் 'ஷா'வைக் கொல்வோருக்கு ஒரு கோடி 'ரியால்' சன்மானம், அவரது மனைவி கூட அப்பரிசைப் பெறலாம். —ஈரான் இஸ்லாமிய அரசு

- ஈரான் மன்னருக்கு பாதுகாப்பு வழங்க ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் சதாத் துணிகர முடிவு. —செய்தி

- தமிழீழக் கோரிக்கையை அமெரிக்க மக்கள் ஏற்றுள்ளனர். —மு. சிவசிதம்பரம் M. P.

- அமெரிக்கர் இலங்கை மக்களை அடக்கி ஆளவே விரும்புகிறார்கள். —N. சண்முகதாசன்

- மலையக மக்களுக்கு விடிவு ஏற்பட்டு விட்டது. 1980ம் ஆண்டு அவர்கள் வாழ்வில் பொற்காலம். —அமைச்சர் தொண்டமான்

- பிரசவ வேதனையால் துவண்டாள் மலையகத்தாய் ஆனால் கொழுந்து ஏற்றிச் சென்றது வாகனம். —செய்தி

- கறுப்புப்பட்டி இயக்கம் பூரண வெற்றி. அறப் போராட்டக்குழு பெருமிதம். —செய்தி

- கறுப்புப்பட்டி இயக்கம், உண்ணாவிரதம். பிரார்த்தனை இவற்றால் சாதிப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது என்பது மிகவும் தெளிவான விஷயம். —கம்யூனிஸ்ட் அ. வைத்திலிங்கம்

- ஜனாதிபதி தலைமையிலான அமைச்சர் குழுவினர் தமிழர்களின் உரிமைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அழைப்பார். —செய்தி

- தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் அரசு வழங்கியுள்ளது. —அமைச்சர் செ. இராசதுரை

---

**தெளிவு:**

சிறையிலிருந்து
விடுதலையாகி...
வீட்டிற்கு வந்த
கைதி—
கூட்டிற்குள்
கீச்சிட்டு கொண்டிருந்த
கிளியை
திறந்து விட்டான்.

**பெரிது:**

நமது
ஆலயங்களில்
சாமிசிலையை
விட
உண்டியல்
பெட்டிகளே
பெரிது.

கலாமோகன்

**கற்பு**

நோக்கல்,
விழிச்சிமிட்டல்,
இருட்டறையில்
ஆலிங்கனம்
ஆம்!
அங்கே ஒன்று
விலைபோகின்றது.

—கலாமோகன்

# இலக்கியத்தில் நகைச்சுவை

நா. தர்மராஜ்ா

உங்களுக்குப் பிடித்தமான நகைச்சுவைப் பாடல் எது'' என்று தமிழக அண்ணுமலைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களைக் கேட்டபோது அவர்கூறிய பாடலையே இம்முறை நகைச்சுவை விருந்தாக்குகிறேன்.

புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடிய நகைச்சுவைப் பாடல் இது. ஆலமரம் ஒன்றிலே குரங்கொன்று இருக்கிறது. கீழே ஒரு பாம்பு தொங்கிக் கொண்டிருக்கிறது. குரங்கு பாம்பை விழுதென்று நினைத்துப் பிடிக்கிறது. பிடித்தபின்தான் பாம்பு என்று தெரிகிறது தெரிந்தவுடன் விளக்கைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் கையை எடுப்பதுபோல் கையை எடுத்து பயத்தால் நடுங்கி ஒவ்வொரு கிளையாகக் குதித்துப் பாய்கிறது. கிளையிலே பாயும்போது கீழே தெரியும் ஆலம் விழுதெல்லாம் அதன் கண்ணுக்கு பாம்பு போலவே தெரிகிறது.

''அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய் தானே'' பயத்தினுல் மேலே ஏறிய குரங்கு உச்சி மரத்திலே ஏறிநின்று கீழே பார்க்கிறது. அப்போதும்பயம் தீரவில்லை. திடீரென தனது வாலைப்பார்த்து திடுக்கிடுகிறது பாம்பு என்று நினைத்து.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்.
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கிழுற்ற விழுதை யெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

எப்படி இருக்கிறது குரங்கின் செய்கை. புரட்சிக் கவிஞரின் கவிதையில் நகைச்சுவை இடம்பெறுவது புதுமை தானே.

---



புலவர்: அந்தக்கால ஆட்சியாளர் இந்தக் கால ஆட்சியாளரிலும் மேலானவர்கள் நளமகாராஜன் நெருப்பில்லாமல் சமைத்தான் . இந்தக்கால ஆட்சியாளர்களுக்கு பெற்ரோலில்லாமல் காரோட்டத் தெரியவில்லையே.

அதிமதுரம்

## ரசப்பொடி

- சமீபத்தில் இசையமைப்பாளர் இளைய ராஜாவின் இசையமைப்பில் ஒரு படத்திற்கு பின்னணி பாடியுள்ள மெல்லிசைமன்னர் M. S. விஸ்வநாதன் ஏற்கெனவே 'வெள்ளிவிழா' படத்தில் V. குமார் அவர்களின் இசையமைப்பிலும் பாடியுள்ளார்.

- கடந்த ஆண்டு சிறந்த தமிழ்ப்படத்திற்கான இந்திய ஜனுதிபதியின் விருதைப் பெற்ற 'அக்ரஹாரத்தில் கழுதை' என்றபடம் வாங்குவோர் இல்லாததாலும் திரையிடத் தியேட்டர் கிடைக்காததாலும் இன்னும் திரையிடப் படவில்லையாம்.

- அமெரிக்க 'டெலிவிஷன்' நடிகையான 'ஏஞ்சல்' டிக்கன்ஸன்' என்பவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறியது.

  ''நான் பெண்களுக்காக உடை உடுத்துகிறேன் ஆண்களுக்காகத் துகில் உரிகிறேன்.

- பிரபல எழுத்தாளர் 'ஜெயகாந்தனை' ஆசிரியராகக் கொண்டு 'கல்பனு' என்ற மாதஇதழ் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு முழுநாவல் இடம் பெறுகின்றது.

- 'இதயம் பேசுகிறது' ஆசிரியர் 'மணியன்' மணியன் என்ற பெயரில் மற்றுமோர் மாத சஞ்சிகையை ஆரம்பித்துள்ளார்.

- தன் அதிகாரத்தால் உலகை ஒரு கலக்குக்கலக்கிய ஹிட்லரும் தன் நகைச்சுவையால் உலகை ஒரு கலக்குக் கலக்கிய சார்லி சப்ளினும் ஒரேவருடம் ஒரேமாதம், ஒரேதிகதியில் பிறந்தவர்கள். அத்துடன் சார்லி சப்ளின் ஹிட்லரை கிண்டல் பண்ணி 'டிக்டேட்ரர்' என்ரெரு படமும் எழுதியிருக்கிருர்

- நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தான் நடித்த படங்களிலேயே தனக்குப்பிடித்தது 'கப்பலோட்டிய தமிழன்' தான் என்று ஒரு பத்திரிகையில் கூறியிருக்கிருர்.

- பிரபல சிங்கள நடிகர் காமினி பொன்சேகா இந்தியாவில் தயாராகிவரும் 'நீலக்கடலின் ஒரத்தில் என்ற படத்தில் கதாநாயகனுக நடித்துள்ளார். இதன்மூலம் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் கதாநாயகனுக நடத்தவர் என்ற பெருமையையும் பெறுகிருர்.

- சமீபத்தில் ஈழத்தின் பிரபல ஓவியர் ரமணி அவர்களை ஒரு திருமண விழாவில் அவரது நண்பர் ஒருவர் சந்தித்தபோது 'உங்கள் வாழ்வின் இலட்சியம் என்ன?' என்று கேட்டதற்கு ரமணி கூறியது.

  ''சென்னை மெரீனு பீச்சில் உள்ள உழைப்பாளர் சிலையைப் போன்று தொழிலாளர்-உழைப்பு இவற்றின் மகத்துவத்தை விளக்கும் சிலையொன்றைச் செய்வது தான்''

சிரித்திரன் காரியாலயம்' வரவுதந்த செங்கதிரை.... "சிரித்திரனுக்கு ஏதும் விஷயதானம் கொண்டு வந்தீரா" என சிரித்திரன் ஆசிரியர் கேட்டார். சதாவதானி கதிரவேற்பிள்ளை நினைவாக நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்ற கதை வீட்டில் இருக்கிறது. சதாவதானி கதிரவேற் பிள்ளை சனசமூக நிலையத்தாரிடம் அனுமதிபெற்று, அனுப்பி வைக்கிறேன் என்றார். அவர் அனுப்பிய கதையைப் படித்தோம். கருவூலம் எம்மைக் கவர்ந்தது பிரசுரிக்கின்றோம்.

சிறுகதை ஆய்வகம்

சிறுகதை:

# 'நிர்ப்பந்தங்கள்'

செங்கதிர்

அன்பாகவும் ஆதரவாகவும் சொல்லியாகி விட்டது. கெஞ்சலும் கொஞ்சலும் முடிந்து விட்டது. மனம் சலித்து பொறுமை செத்துவிட்டது.

அடம்பிடித்து அழுகின்ற இரண்டுவயதுப் பொடியனைத் தூக்கி மடியில் கிடத்திவிட்டு மருந்தைச் சிப்பியில் உரைத்துக் கிடந்த மருந்தை பலவந்தமாகப் பருக்கினாள். கல்யாணி. கடைவாயில் வழிந்தோடுகின்ற மருந்தை வலது கை விரல்கள் வழித்து வாயில் திணிக்கின்றன,

"ம்...மா..." மருந்து கசக்கிறது. குழந்தை குழறுகிறது.

முற்றத்தில் சுருண்டு படுத்துக்கிடந்த பெட்டைநாய் காணக் கூடாததைக் கண்டுவிட்ட மாதிரி குரைக்கிறது......

பூவரச மரநிழலில் நின்ற 'வாட்டர் பம்ப்' யாருடையது என அந்நேரம் வரை வாக்குவாதப்பட்டுக் கொண்டகல்யாணியின் மூத்த மகனும் இளையவளும் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில் ஒருவருக் கொருவர் ஓங்கி சபிக்கிறார்கள்.

பெட்டைநாய் குரைக்கிறது...

"வீட்டுக்காரர்... எடேய் தம்பீ... எடேய்... கொய்யா நிக்கிறாவோ—" ஒட்டை விழுந்த கிடுகுப்படலையை பாதி திறந்து முகத்தை நீட்டிக்கொண்டு மாணிக்கம் கேட்கிறார்.

குரல்கேட்டு அடுப்படியின் வரிச்சு மட்டையின் இடைவெளியினூடாக பார்வையை வீசுகிறான் கல்யாணியின் கணவன் சுப்பிரமணியம்.

"இஞ்சை பாரப்பா...மாணிக்கம் கூப்பிடுகிறார் போலைகிடக்கு. நா தடுமாற முணுமுணுக்கிறார்.

"இண்டைக்கு திங்கட்கிழமையே... ஓ—! இண்டைக்கெல்லோ தாறனெண்டு சொன்னது- இரகசியமாகக் கேட்கிறாள் கல்யாணி.

கணவன் மனைவியை மௌனமாக — ஆழமாக நோக்குகிறார் நீ சொன்னது சரிதான் சுப்பிரமணியத்தின் பார்வை அப்படித்தான் சொல்லுகிறது.

"அம்மா... ஆரோ வந்திருக்கினம் — சண்டையை நிறுத்தி விட்டு மூத்தமகன் கத்துகிறான்.

"இஞ்சாரப்பா... அவன் பொடியன் உளறிக் கொட்டமுன்னம் எழும்பு—" சுப்பிரமணியத்தின் குரல் நடுங்குகிறது. குரல் மட்டுமா உடலே குலுங்குகிறது.

மடியில் கிடந்த பொடியனை இறக்கிவிட்டு சேலையை சரிசெய்து கொண்டு கல்யாணி எழும்புகிறாள்

"இஞ்சார்... நான் நிக்கிறேனோ என்று கேட்டால் இதுக்காகத்தான் எங்கேயோ போட்டுது எண்டு சொல்லு. "என்ன கேட்டுதா...... முத்தத்தில் அந்த இரண்டு சனியன்களும் நிக்குதுகள். அதுகளை இஞ்சை அனுப்பிப் போட்டு போ...... தருணம் பார்த்து காட்டிக் கொடுக்குங்கள் கழிசடைகள் —"

பாதி திறந்து கிடந்த அடுப்படிப் படலையினூடாக நுழைந்த மகனையும் மகளையும் இழுத்து



## ஆதாரம்

கோபுரத்தின்—
கலசம் நினைத்தது
என் 'மூலாதாரம்'
பலமானது, ஆகவே
எனக்கு அழிவேயில்லை...
கோபுரத்தின்—
அஸ்திவாரம் நினைத்தது
என் 'மேலாதாரம்'
புனிதமானது
ஆகவே எனக்கு
அழிவேயில்லை...



என்ன பெரியவர் சிரிக்கிறீங்க;

அரசாங்க சேவையில் நிம்மதியாகத் தூங்கிய நீங்கள் ''இளைப்பாறப் போகிறேன்'' என்று சொல்வதைக் கேட்கச் சிரிப்பு வருகிறது.

—ஜோக்கிரட்டீஸ்

---

இருத்திவிட்டு இடைவெளி தெரியாமல் படலையை இறுக்கமாகச் சாத்திவிட்டுக் கொண்டார் சுப்பிரமணியம்.

தெய்வ விக்கிரகங்களாக மூன்று பிள்ளைகளும் அசையாமல் - பேசாமல் - தகப்பனின் அவதியைப் பார்த்து பேசாமல் இருக்கின்றனர்.

கல்யாணி வெருட்டியும் கேளாமல் பெட்டை நாய் வாள்வாள் என குரைக்கிறது.

மாணிக்கத்தினதும் கல்யாணியினதும் கேள்விகளும் பதில்களும் நாயின் சத்தத்தில் உருத் தெரியாமல் கரைகின்றன.

''என்னென்ன கேள்வியெல்லாம் கேக்கிறாளே...... இவள் என்ன சொல்லி சமாளிக்கப் போகிறாள்— '' சுப்பிரமணியத்தின் நெஞ்சு பொருமுகிறது.

அடுப்படி வரிச்சுமட்டை இடைவெளியினூடாக கண்களை ஊடுருவ விடுகின்றார் அவர்...

மாணிக்கம் கையைக்காட்டி ஆவேசமாகப் பேசுகிறார்.

கல்யாணி தலைகுனிந்து கொண்டு அடக்கமாக நிற்கிறாள் — தெய்வத்திடம் பிச்சை கேட்கும் நிலை !

'' சே . . . . பஸ் ட்ரைவர் வேலைக்குப் போயிருந்தால் கூட கிடக்கிறதை வைச்சுக் கொண்டு மானம் மரியாதையாக வாழ்ந்திருக்கலாம்... அதுவும் மதிப்பான தொழிலோ அது இது எண்டு எத்தினை கதை கதைச்சாள் . . . இப்ப அவனுக்கு முன்னாலை தலை குனிஞ்சு கொண்டு நிக்கிறா - நிக்கட்டுமே !

... அவனிலையும் என்ன பிழை... முத்தையன் கட்டு மூண்டு ஏக்கர் காணியையும் திருத்திறதுக்கு தானே அங்கையும் இஞ்சையுமாக கடன்பட்டு தந்தவள்... காணி திருத்த கிணறு வெட்ட அது இது எண்டு அம்பதினாயிரம் ரூபா கடன் பட்டிட்டாள்......

......என்ன பலன் அப்பிடி ...மிளகாயும் வெங்காயமும் வாய்க்குமெண்டால் இரண்டு வருசத்தில் உந்தக் கடனை கொடுத்திடேலாதோ ... என்ன மாதிரி கொடுக்கிறது ? உப்புக்கும் உரத்துக்கும் மருந்துகளுக்கும் ஏன் எல்லாத்துக்குமே விலை ஏறிப் போட்டுது. ஆக மிளகாயும் வெங்காயமும் தானே விலை குறைஞ்சிருக்கு...... நாசமாய்ப் போக—! ''

மிளகாயும் வெங்காயமும் விலை ஏறி இருந்த காலத்தில் தான் பனங்காணிகள் கூட பயிர் செய் நிலங்களாக வேகமாக மாறிய காலம் — அரசாங்கத் தொழில்கூட நாட்டம் குறைந்து விசுவமடுவும் கிளிநொச்சியும் முத்தையன்கட்டும் ஒவ்வொருவர் வாயாலை நிமிஷத்துக்கொருதடவை பெயர் அடிபட்ட நேரம் தான் - சுப்பிரமணியத்துக்கு பஸ் ட்ரைவர் வேலைக்கு வா என்று கடிதம் வந்தது.

இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையாகிவிட்ட பிறகு அபூர்வமாக கிடைத்த அந்த வேலையை யாவது செய்ய கல்யாணி அனுமதித்தாளா?

கல்யாணி மட்டுமா சுப்பிரமணியத்துக்கு தடை போட்டாள்—?

சுப்பிரமணியத்தின் அடிமனதில் உறைந்து கிடந்த, தொழிலில் தரம், அந்தஸ்து நோக்கும் மனப்பான்மை கல்யாணியின் பேச்சுகளுக்கு உறுதுணையாக நின்று மேலதிகமான அர்த்தம் கொடுத்து, நியாயம் கற்பித்தது என்பது அவருக்கு மங்கலாகத் தெரியும் - புரியும். ஆனால் தனது அந்தமோகம்தான் முழுக்காரணம் என்பதை சுப்பிரமணியம் இன்று வரை அவருக்கு விளங்க மறுக்கிறது.

அடுப்புத் தணலில் வெந்து போன பனங்கிழங்கை எடுத்து இரண்டு மூன்று தடவை சாணியால் மெழுகி இருந்த நிலத்தில் மெதுவாகத்தட்டி விடுகிறார். அவருக்கு வாயெல்லாம் உமிழ் நீராகிறது.

பனங்கிழங்கை கிழித்து — முறித்து—தும்புகளை நீக்கி—வாய்க்குள்போட்டுக் கொள்கிறார். அவரை அறியாமலேயே இரண்டொரு உப்புக்கல்லையும் எடுத்துக் கொள்கிறார்.

வாற்பகுதி கிழங்கை மூத்த மகளும் - மகனும் இனிக்க இனிக்க சப்பிக்கொள்கிறார்கள் — சத்தமில்லாமல்!

ஓசையே வெளிவராமல் தகப்பனும் பிள்ளைகளுமாக கிழங்கை

---

வியாபாரி நேர்மையை அடகுவைத்துப் பிழைப்பு நடத்துகிறான்
சட்டத்தரணி மனச்சாட்சியை அடகுவைத்துப் பிழைப்பு நடத்துகிறான்
அரசியல்வாதியோ நாட்டையே அடகுவைத்துப் பிழைப்பு நடத்துகிறான்

---

தந்தை; பிள்ளைகள் நீங்கள் எல்லாரும் ரோட்டில்போய் விளையாடுங்க வீட்டிற்குள் சத்தம் போடாதையுங்க.

மனைவி: என்ன ரோட்டிலா?

தந்தை: பயப்படாதே... இப்போ ரோட்டில் கார், லொறி ஓடுவதே கிடையாது... பெற்ரோல் விலை கூடியதால்.

மென்று கொண்டு இருக்கிறார்கள்...

தான் குரைப்பதை இலட்சியம் செய்யாததைக்கண்டு வெட்கப்பட்டோ ரோசம் கொண்டோ பெட்டைநாய் குரைப்பதைநிறுத்திக் கொண்டுவிட்டது.

''...கிடக்கிற காணியளை ஆருக்காவது அறுதியாக எழுதியாவது கடனைக் கொடுக்கிறது தான் வாழுகிறதெண்டால் மானம் ரோசத்தோடை வாழவேணும்... ஓ...! எத்தினை நாளைக்கெண்டு உங்களின்ரை படலையை திறக்கிறது... சீ... உப்பிடி வாழுகிற தெண்டால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துப் போடுவன்... ஆற்றையும் பொருளையும் எடுத்து திருப்பிக் கொடுக்காமல் தின்னுகிறதிலும் பார்க்க மனுசிமாரை வித்து பிழைக்கலாம்—''

சுப்பிரமணியம் தனக்குத் தானே தலையில் ஓங்கிஓங்கி அடித்துக் கொண்டார்—உடலெல்லாம் எரிந்தது.

ஓடிப்போய் மாணிக்கத்தின் நெஞ்சைப்பற்றி நாலு கொடுக்க வேண்டும் போலிருந்தது - அவர் எழும்பவே இல்லை!

ஓவென்று குழறிக்கொண்டே கல்யாணி நடக்கமாட்டாதவளாய் நடந்து வருவது வரிச்சு மட்டையிடைவெளியினூடே தெரிகிறது.

பெட்டை நாயால் கூட மாணிக்கத்தின் பேச்சை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கிடு குப்படலையை நாய்க்குப் பயந்து இறுகச் சாத்திவிட்டு மாணிக்கம் போனபின்பும் கூட தாவித்தாவி குரைக்கிறது...

கல்யாணி அடுப்படிக்குள் நுழைந்து விட்டாள். தாயின் வருகையை கண்டதும் மருந்து குடித்த குழந்தை மடியில் ஏற முயற்சிக்கிறது.

''போ... அங்காலை...'' சினந்து கூவினாள் தாய்.

கணவன் மனைவியை மௌனமாகப் பார்த்துக் கொள்கிறார்.

மாணிக்கத்தின் பேச்சு—மனைவியை இழுத்துப் பேசிய பேச்சு அவரை நிலைகொள்ளாமல் இருக்கச் செய்தது. கண்கள் கலங்கி விட்டன.

''ராஸ்கல்—'' என்ன மாதிரி கதைக்கிறதெண்டு தெரியாது... காசைக் கேக்கிறதுக்கு அவனுக்கு இந்த நியாயங்கள் என்னத்துக்கு எங்களுக்கு வட்டிக்கு கடன்தருகிற அளவுக்கு கூடுதலான பணம் எங்கை இருந்து வந்தது... கள்ளர்

ஒரு சமூக அமைப்பில் - ஒரே சூழலில் வாழுகின்றவர்களில் ஒருவன் மற்றொருவனிடமிருந்து வட்டிக்குகடன் வாங்குகின்ற நிலையை எப்படி உருவாகமுடியும்.?

இந்த வேடிக்கையான சகித்துக்கொள்ள முடியாத சூழலிலும் இருப்பது தான்!

சுப்பிரமணியம் மனைவியின் வலதுகையைப்பற்றி ஆதரவாகத் தடவி மானசீகமாக மன்னிப்பை வேண்டிக் கொண்டார்.

''இஞ்சை பார்... என்ரை வீட்டு முத்தத்தில் இன்னொருவன் வந்து இப்படிப் பேசிப்போட்டு இனியும் போக ஏலாது. இனி ஏதாவது ஒருவழி செய்தேயாக வேணும்... உனக்கு சம்மதமெண்டால் முத்தையன் கட்டு மூண்டு ஏக்கர் காணியையும் நல்லவிலை

## நகையினால் விளைந்த காவியங்கள்

நகைதான் பல பெருங் காவியங்களுக்கெல்லாம் காரணமாய் இருந்திருக்கின்றது. மஹாகவி காளிதாசரின் சாகுந்தலம் என்ற காவியம் துஷ்யந்தன் என்ற மன்னன் காட்டிலே கண்டு காதலித்து, மணந்து விட்டுப் பிரியும்போது கொடுத்துச்சென்ற 'கணையாழி'யை சகுந்தலை தொலைத்ததால் ஏற்பட்டது.

கால்'சிலம்பை' விற்கச் சென்ற கோவலனை காவலர்கள் பிடித்து கள்வனென்று வெட்டியதால் கண்ணகியின் கற்புக் கனல் மதுரை மூதூரைக் கரித்தது. அதனால் சிலப்பதிகாரம் தோன்றியது.

இராசசூய யாகத்திற்கு வந்த துரியோதனன் பளிங்கை நீரென்றும், நீரைப் பளிங்கென்றும் எண்ணி ஏமாற அதனைப் பார்த்துத் திரௌபதை 'நகை'த்ததால் பாரதயுத்தம் ஏற்பட்டது.

இதிகாசங்களில் மற்றொன்றான இராமாயணம் நடைபெற்றதற்குக் காரணமும் நகைதான். இது என்னநகை தெரியுமா? சூர்ப்ப'னகை' இவள் காட்டிலே இராமனைக் கண்டு மோகித்து மூக்கறுந்ததால் தான் இராமாயண யுத்தம் ஏற்பட்டது. காவியமும் கிடைத்தது.

தகவல்; ''அகளங்கன்''

## ஷாவின் நகைச்சுவை

அறிஞர் பேர்னார்ட்ஷா தான் தனது அறையில் கரும மாற்றும் போது அறையைப் பூட்டிக் கொண்டுதான் உள்ளே யிருப்பார் வெளிக்கிளம்புகையில் திறந்துவிட்டு சென்றுவிடுவார். இதை அவதானித்த அவருடைய நண்பர் ஒருவர் அவரிடம் இப்படிச் செய்வதற்கான காரணத்தைக் கேட்டார் அதற்கு ஷா ''நான்தான் பெறுமதியான ஒரு பொருள். பெறுமதியான பொருட்களுக்குத்தான் பாதுகாப்புத் தேவை அதனால்தான் இப்படி'' என்று தனக்கேயுரிய பாணியில் நண்பருக்குப் பதிலளித்தார்.

இ. பத்மராஜா

கேட்டு வந்தால் வித்துப்போடுவம்''—

''என்ன? அவசரமாக-சுருக்கமாகக் கேட்டாள். கல்யாணி.

''காணியை வித்துப்போட்டு கடனை அடைக்கிறதுதான்...எனக்கெண்டால் வேறை வழி தெரியேல்லை...''

''வித்துத்தான் கடனை அடைக்க வேணுமெண்டால் அவன் மாணிக்கத்துக்கு உடனே மறுமொழி சொல்லி இருக்கமாட்டேனே? அந்தக் காணியின்ரை தேவை இன்னும் கொஞ்சவரிஷத்துக்குப் பிறகுதெரியும். வெங்காயமும் மிளகாயும் நெடுக இதே விலைக்குத்தான் இறக்குமதி செய்யப்போகினமோ... இறக்குமதி செய்யிறவையின்ரை காலமும் மாறுமலா போகும்?

சுப்பிரமணியம் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டார். மனைவியின் நம்பிக்கை அவரை வியக்க வைத்தது.

உள்ளூரில் விளையக் கூடிய பொருட்கள் எல்லாவற்றிற்கும் முற்று முழுதாக இல்லாவிட்டாலும் கூட உற்பத்தியை பாதிக்காத வகையில் உற்பத்தியாளர்களின் மனதை சோர்வடையச் செய்யாத வகையில் - இறக்குமதிக் கட்டுப்பாடு மீண்டும் அமுலாகும் போது காணிகளின் அவசியம் கூடும் - மதிப்பு பெருகும்.

பலருக்கு விளங்க மறுக்கின்ற - ஏற்றுக்கொள்ளாத - இந்த உண்மையை கல்யாணி எவ்வளவு இலேசாக சுப்பிரமணியத்துக்கு விளங்க வைத்துவிட்டாள்?

''அப்ப... கடனை அடைக்கிறதுக்கு வழி என்ன? விடை தெரியாத கேள்விக்கு ஆசிரியரிடம் விடை கேட்கும் மாணவனின் நிலை.

''நீங்களும் யோசியுங்கோ... நானும் யோசிக்கிறேன்... எது சரியோ அதைச் செய்வம்—'' கல்யாணி நிதானமாகச் சொன்னாள்.

சுட்டிருந்த பனங் கிழங்கை கிழித்து - முறித்து - தும்பைநீக்கி உப்போடு சேர்த்து வாய்க்குள் போட்டுக் கொண்டு அடுப்படியில் இருந்து வெளியே வருகிறார் சுப்பிரமணியம்.

''இஞ்சாரு... தேத்தண்ணி ஒண்டு போடப்பா...'' திண்ணையில் வந்து இருந்து கொண்டு மனைவிக்கு சொல்கிறார்.

அவர் கண்கள் ஓட்டை விழுந்த கிடுகுப்படலையை நோக்குகின்றன. சில வேளை மாணிக்கம் வந்து படலையின் ஓட்டையினூடாக கவலம்கெட்டவாழ்க்கை வாழும் சுப்பிரமணியத்தை பார்க்க நேரிட்டால் என்ன செய்வது?

'' நீ சொன்னமாதிரி 'வித்துப் பிழைக்கிறேன்' '' என்று மாணிக்கம் கடைசியாகச் சொன்ன வழியை சொல்ல முடியுமா?

பெட்டை நாய் சுருண்டு படுத்துக்கிடக்கிறது...

'' கடனை அடைக்க என்ன வழி? '' தலையைக் கோதிக்விட்டுக் கொண்டார் சுப்பிரமணியம்

கள்ளிப்பெட்டி ஒன்றின்மேல் கிடந்து லாம்பு ஒளியை பரப்புகிறது...

பிள்ளைகள் உறங்கி விட்டார்கள்.

சிறுஒளி வட்டம் கணவன் மனைவி மீது விழுகிறது.

கல்யாணியின் கையை சுப்பிர மணியம் இதமாக தடவி விடுகிறார்.

''என்ன... உங்களைத்தான்... ஏதாவது வழி அகப்பிட்டதோ...

---

சிறைச் சாலையில் இருந்த காலத்தில் ஸ்ரீ நேருவின் கவலை, எதுவாகில் சர்வசாதாரண மனிதனின் உடம்பில் பட்டுத் தெறிக்கும் சூரிய வெளிச்சம் தனது உடலில் படவில்லையே என்பதே.

---

சிரிப்பு என்பது அடிக்கடி நிகழின் அதன்பெருமை குன்றிவிடும். இராமர் தனது வாழ்க்கையில் ஐந்தே ஐந்து தடவைகள் மாத்திரமே சிரித்ததாகக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

## கவிஞன்



அவனிடம்
வறுமையைத்தவிர
வேறெதுவும்
இருக்கவில்லை—
அவனது
கவிதைகளில் மட்டும்
வறுமை—
இருக்கவில்லை.

---

''உஹும்... உனக்கேதாவது''
அவளுக்கு வழி ஒன்று தெரிகிறது...

தோட்டம் செய்தும் கூடுதலான வருமானம் பெறலாமென்று தெரிந்தபோது ஒவ்வொருவரும் முத்தையன் கட்டுக்கும் விசுவமடுவுக்கும், கிளிநொச்சிக்கும் தோட்டம் செய்யப்போ என்று துணிந்து சொன்னது கல்யாணிக்கு நினைவுக்கு வருகிறது.

அங்கே போ என்று துணிந்து சொல்ல இப்போது ஒருவருமே இல்லை!

''நான் சொல்றேனெண்டு கோபிக்காதேயுங்கோ... உங்களிட்டை பஸ்ட்றைவர் லைசென்ஸ் இருந்தது தானே?''
''உம்...''

''என்னட்டை தோடும்இல்லை காப்பும் இல்லை; எல்லாமே அடைவிலைதான் கிடக்கு... என்ரை மனதைக் கல்லாக்கிக்கொண்டு என்னட்டைக்கிடக்கிற இந்த தாலிக்கொடியைஅடைவுவைச்சு தாறன் போதா தெண்டால் மெசினையும் விப்பம். சவூதி அரேபியா பக்கம் ட்ரைவர் வேலைக்குப் போனுல் நல்லா உழைக்கலாமாம்... சாப்பாடெல்லாம் அவங்களோடை சம்பளம் மிச்சம்... போனவங்களெல்லாம் மாசா மாசம் ஐயாயிரம் ரூபா மட்டில் அனுப்புகிருங்கள் நீங்கள்என்ன சொல்றியள்?''

படுத்து இருந்த சுப்பிரமணியம் எழும்பி இருந்து கொண்டார். கண்கள் மனைவியை ஆழமாக ஊடுருவின. கால்யாணியின் கண்கள் கண்ணீர்த் துளிகளில் பளபளத்தன. அவள் தலைகுனிந்து கொண்டாள். உலர்ந்த இதழ்கள் விசும்புகின்றன.

அவளுக்கு கணவனை வெளிநாட்டுக்கு அனுப்ப ஆசையா, என்ன?

குழந்தைக்கு பலவந்தமாக மருந்து பருக்கியது போல, தனது எண்ணத்தை கணவன்மீது பலவந்தமாக திணிக்க முடியுமா?

''மாணிக்கம் சொன்னமாதிரி ஒவ்வொரு கடன் காரனும் முத்தத்தில் நிண்டு கதைக்க வெளிக்கிட்டால் இரண்டு பேரும் அடுப்படிக்குள்ள இருந்துகொண்டு பொடியனைத்தான் மறுமொழி சொல்ல அனுப்பவேணும். நீங்கள் என்ன நினைக்குறியள்?'' குழைவாகக் கேட்டாள் கல்யாணி.

பஸ் ட்றைவர் தொழிலுக்கு போகவா என்று கேட்டகல்யாணி ட்றைவர் தொழிலிலும் முத்தையன் கட்டில் உழைத்தால் அதிக வருமானம் பெறலர்மென்று நம்பிய கல்யாணி—

சவூதி அரேபியாவுக்கு ட்றைவர் தொழிலுக்கு போனுல் மாதம் ஐயாயிரம் ரூபா மிச்சப் படுத்தலாமென்று கெஞ்சுகின்ற கல்யாணி—

எல்லாமே அவருடையமனைவி கல்யாணியே தான்!

கோழி மேய்ச்சாலும் அரசாங்கத்தில் மேய்க்கவேணும் என்ற காலம்மாறி பஸ் ட்றைவர் வேலை செய்தாலும் வெளிநாட்டில் செய்யவேண்டும் என்றுகாலம் கனிந்து இருக்கே!

தாலிக்கொடியை அடகு வைத்து அரேபியாவுக்குப் போக அது முத்தையன்கட்டுக்கு போன கதையாக மாறினுல் இரண்டினுலும் ஏற்பட்ட கடனை அடைக்க கல்யாணி என்ன வழி சொல்லுவாள்?

''என்ன யோசிக்கிறியள்?'' அழாக் குறையாக சுப்பிரமணியத்தின் மார்பை மெல்ல தடவியவாறு கேட்கிருள்.

''எனக்கு என்ன யோசினை... அட, ஒரு குடும்பம் நல்லாய்வாழவேணுமெண்டால் எங்கேயாவது வெளிநாட்டுக்குப் போகவேணுமெண்டு ஒருநிலை உருவாகி இருக்கே அதைப்பற்றித்தான். யோசிக்கிறன் இதெல்லாம் தற்காலிகமான வழிதானே... தற்காலிகமான தீர்வுகள்தானே...''

''நாளைக்கு பாஸ்போட் எடுக்கிற வேலையைக் கவனியுங்கோ''

''இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாஸ்போட் எடுக்கிறதைக் கவனியுங்கோ எண்டு திருத்திச் சொல்லு.''

நிதானமாக - அழுத்தமாக மனக்கஸ்டத்தோடு சொல்லிய சுப்பிரமணியததின் கைகள்மனைவியின் கைகளுடன் பின்னிப் பிணைத்து இறுகுகின்றன...

அந்த நெருக்கத்துக்குக் கூட வழியொன்றை சொல்லி இருக்கிருள்?

(கற்பனையே)

நிறைவு.


---

## மரத்தடி மாமுனி

புத்தபகவான் பிறந்தது அசோக மரத்தடியில் வைகாசிப் பௌர்ணமி தினத்தில்.

அவர் ஞானம் பெற்றது அரச மரத்தடியில் வைகாசிப் பௌர்ணமி தினத்தில்.

மஹாநிர்வாணம் அடைந்தது அரசமரத்தடியில் வைகாசிப் பௌர்ணமி தினத்தில்.



சின்னக்குட்டி: என்னண்ணை முகத்தில் கவலை.

சவாரித்தம்பர்; சங்கிலி மன்னன் ஆண்ட நாட்டில் சங்கிலித் திருடர்கள் கூடிப்போச்சுதே என்பதுதான்.

# ஏன் இப்படி?

'அகளங்கன்'

இறந்த உடலை எரிப்பதா? புதைப்பதா? இந்துக்களின் வழக்கம் இங்கு சில முரண்பாடுகள் காணப்படுகின்றன.

திருஞான சம்பந்தர்

காடுடைய சுடலை நீற்றர்...
உள்ளங் கவர் கள்வன்.

என்றுபாடுகிறார்

திருநாவுக்கரசர்

காடுடைச் சுடலை நீற்றார்...

என்றுபாடுகிறார். இவர்கள் இருவரும் சிவபெருமான் இறந்த உடலை எரித்த சாம்பலை தனது உடலிலே பூசுபவர் என்கிறார்கள் அதிலிருந்து இந்துக்கள் பிரேதங்களை எரித்தலையே வழக்கமாகக் கொண்டுள்ளனர் எனலாம்.

ஆனால் சுந்தரமூர்த்தி நாயனாரோ

செத்தார் எலும்பு அணிவான்
திருக்கேதீஸ் வரத்தானே.

என்கிறார் அதாவது இறைவன் இறந்தவரின் எலும்பை அணிபவனும். எலும்பை அணிவதானால் உடலும் புதைக்கப்பட வேண்டும்.

ஏன் இப்படி சமய குரவர்களின் கருத்தில் மாறுபாடு தோன்றியது?


A. K. Selvanayagam.
Television Technology.
Institute.

- வர்ணத் தொலைக்காட்சி பற்றிய பூரணத்துவமான பாடங்கள்
- தொலைக்காட்சிக் கருவிகளின்—இயக்கம்—பராமரிப்பு - பழுதுபார்த்தல் போன்றவற்றில் பூரண பயிற்சி
- பூரணத்துவப் பயிற்சிக்காக 18 மாதகால வகுப்புக்கள்
- பலரது வசதிக்கும் வேண்டுகோளுக்குமாக குறுகியகாலப் பயிற்சிக்கான மோத வகுப்புக்கள்.
- ஆவணியில் ஆரம்பமாகின்றன.

☐ விபரங்கட்கு
97, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

ஆ. க. செல்வநாயகம்.
தொலைக்காட்சி, தொழில்நுட்ப
கல்வி நிலையம்.


## ராஜாஜியின் எளிமை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இந்தியாவின் முதலாவது கவனர் ஜெனராக வந்த நேரம் அது. அவருடைய தூரத்து உறவினர் ஒருவர் தன்னுடைய மகன் அவரை கவனர் கோலத்தில் காணவிரும்புவதாயும் எப்போது அழைத்து வருவது என்றும் கேட்டு எழுதியிருந்தார். ராஜாஜி அவருக்கு இப்படி பதில் கூறினார்.

''நீங்கள் முன்பு பார்த்த ராஜாஜிதான், நடை உடை பாவனையால் எந்தவிதமாற்றமுமின்றி இன்றும் தன் கடமைகளைச் செய்துகொண்டிருக்கிறார் விடுமுறையில் உங்களைச் சந்திப்பதற்கு நான் அங்குவருகிறேன். தயவுசெய்து இங்கு வருவதாகப் பணத்தையும் நேரத்தையும் விரயமாக்க வேண்டாம்''

— இ. பத்மராஜா




'அகளங்கன்'

தமிழிற்குக் கதியார் என்றால், கதி என்ற சொல்லில் வரும் க. கம்பரும், தி. திருவள்ளுவரும், என்று சொல்லுவது இன்று வழக்கமாகிவிட்டது. அத்தகைய சிறப்புப் பெற்ற கவிச் சக்கரவர்த்தி கம்பர், வடமொழியில் வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தை தமிழில் காவியமாகப் பாடியதைப் பற்றிய சர்ச்சை இன்றும் தமிழரிடையே நிலவி வருகிறது.

கம்பரின் கவித்திறமை, தமிழ்ப்புலமை ஓர் வடமொழி இலக்கியத்தை தமிழ்ப்படுத்துவதில் வீணனது என்று சிலர் கூறும் அதே வேளை இராமாயணத்தை வடமொழியிலும் சிறப்பாக தமிழிற்பாடி, கம்பன் தன் காவியத்திறமையை நன்கு வெளிக்காட்டி இருக்கிறான் என்றும் சிலர் கூறிக்கொள்கிறார்கள். என்ன இருந்தாலும் இன்னொருதனுக்குச் சொந்தமான சிந்தனையை எடுத்துக் கையாண்டது கம்பனின் திறமைக்கு சிறிது மாசுதான் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

இதுபற்றி தமிழ்நாட்டு அரசின் அன்றய ஆஸ்தான கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை என்ன கூறுகிறார் தெரியுமா?

வான்மீகி முனிவர் வனத்திலே ஓர் பலாக்கனியைக் கண்டு எடுத்து வருகிறார். அதுபலாக்கனிதான். இருந்தாலும் அதன் நிலையோ பால்படிந்திருக்கிறது, முள்ளடர்ந்திருக்கிறது. பலாக்கனியும் கனியாத நிலையில் முள் அடர்ந்தே இருக்கிறது. அதுமட்டுமல்ல ஒரு ஒழுங்கான வடிவமில்லாமல் பருத்து, நீண்டு பரிமளிக்கிறது.

இந்த நிலையிலிருந்த பலாக்கனியைத்தான் வான்மீகி உலகுக்கு வழங்கினார். கம்பர் என்ன செய்தாராம் தெரியுமா? மேல்படிந்த பிசினை அகற்றி மெள்ளக் கீறி மெதுவாகச் சுளை எடுத்துத் தேனையும் சேர்த்துக் குழைத்து, இலக்கிய ஆர்வலர்களிற்கு, அறிஞர்களுக்கு விருந்து வைத்தானாம் இதுதான் நாமக்கலாரின் ஆழ்ந்த கருத்துச் செறிந்த பாடல்.

மால்கடிந்த தவமுனி வான்மீகி என்பான்
வனத்திடையே தான்கண்டு கொண்டு வந்த
பால்படிந்து முள்ளடர்ந்து பருத்து நீண்டு
பரிமளிக்கும் பலாவின்கனி பாருக் கீந்தான்
மேல்படிந்த பிசினகற்றி மெள்ளக் கீறி
மெதுவாகச் சுளையெடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்

தமிழ்த் தாயள் நோன்பிருந்து ஈன்றெடுத்த மைந்தன் கம்பனின் புலமை எப்படியிருக்கிறது.

● உலக சமாதானத்திற்கான முயற்சியில் நாம் தவறுவோமேயானால் கடவுள் எம்மை மன்னிக்கமாட்டார். —சோவியத் ஜனாதிபதி

□ 'அப்பாடா... ரஷ்யாக் காரருக்கும் கடவுளிலே பயம் இருக்கு என்பதை நினைக்க சந்தோஷமாயிருக்கு' என்கிறார் ஒருபக்தர்.

● கொழும்பிலுள்ள போக்குவரத்துச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலுள்ள மதுச்சாலையை மூடுவதில்லை என சங்கம் தீர்மானித்துள்ளது. —செய்தி

□ 'மதுரமான செய்தி' என மகிழ்கிறார் ஒரு மதுப்பிரியர்

● 17 பிரயாணிகளை நடுவழியில் இறக்கி தவிக்கவிட்டுப்போன யாழ்-மட்டுநகர் பஸ்...

□ 17 என்றால் அதன் கூட்டுஎண் 8ஆக வருகிறது. 8 ஒரு துர்ரதிஷ்டம் பிடித்த இலக்கம். அதுதான் பஸ் விட்டிட்டுப்போது என்கிறார் ஒருஎண் சோதிடப் பைத்தியம்.



## செய்தி முறுவல்

● பண்ணைக் கழிவிலிருந்து எண்ணை பொழிகிறது. அமெரிக்க விஞ்ஞானிகளின் சோதனை, சாதனையாகிறது —செய்தி

□ ய ஹ்... அல்லாஹூ...இதுஎன்ன சோதனை... என்று இச்சாதனை பற்றி வேதனைப்படும் அரபு நாட்டவரிகை முகத்தில் 'அசடு' பொழியப் போகிறது என்கிறார்... பெற்றோல் விலையுயர்வால் வாகன சவாரியைக் குறைத்து பாதயாத்திரை மேற்கொண்டுள்ள ஒரு மத்தியதரப் பிரமுகர்...

● குருநாகலையில் 'ஈசியகொல்லை பல்கலைக் கழகம் நிறுவப்படும். மந்திரி நிஸங்க விஜயரத்தின தகவல் —செய்தி

□ அங்கும் 'சவீப் ரிக்கற்' விற்பது எப்படி என்று பயிற்சி அளிப்பார்களா எனக்கேட்கிறார் முன்பு 'சியவச' சுவீப் ரிக்கற் விற்க அலைந்த ஆசிரியர்—

● யாழ் நகரில் 'மெட்னி'க் காட்சிகளுக்குத்தடை செய்ய யாழ் மாநகரசபைக்குப் பிரேரணை வருகிறது. —செய்தி

□ யாழ் மாநகரசபையே ஒரு தியேட்டர் தானே... அதனை முதல் அப்புறப்படுத்தட்டும் என்கிறார் அடிக்கடி ஆங்கிலப் படம் பார்க்கும் ஒரு பையனின் தந்தை

# முரண் பா(ட்)டுக்கள்

- ஆயிரத்தில் ஒருத்தி அம்மா நீ
  உலகம் அறிந்திடாத பிறவி அம்மா நீ...
- □ உன்னை நான் சந்தித்தேன்
  நீ ஆயிரத்தில் ஒருவன்...
- ஒரே பாடல் உன்னை அழைக்கும் - உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்
- □ நான் உன்னை அழைக்கவில்லை என் உயிரை அழைக்கிறேன்...''
- ''ஆண்டவன் படைச்சான் என்கிட்டே கொடுத்தான் அனுபவி ராஜான்னு அனுப்பிவைச்சான்...''
- □ கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன்
  யாருக்காகக் கொடுத்தான், ஒருத்தருக்கா
  கொடுத்தான்... இல்லை ஊருக்காகக்
  கொடுத்தான்
- உலகே மாயம் வாழ்வே மாயம்
  நிலையேது நாம் காணும் சுகமே மாயம்...
- □ இனியது இனியது உலகம்... புதியது புதியது இதயம்
  அருமை இந்த இளமை வாழ்வில் அனுபவம்
  பெறுவது பெருமை...
- நான் தெய்வமா இல்லை... நீ தெய்வமா
  தமக்குள்ளே யார் தெய்வம் நீ சொல்லம்மா
- □ கடவுளும் நானும் ஒரு ஜாதி ஒரு ஜாதி
  அந்தக் கௌரவம் எனக்கும் சரிபாதி சரி பாதி...
- ''எல்லோரும் நலம் வாழ நான் பாடுவேன்
  நான் வாழ யார் பாடுவார்...''
- □ எங்கிருந்தாலும் வாழ்க... உன்
  இதயம் அமைதியில் வாழ்க...
- ''மனிதன் என்பவன் தெய்வமாகலாம்...''
- □ ''கடவுள் மனிதனாய்ப் பிறக்க வேண்டும்...''

# ஈழமண்டல நாடெங்கள் நாடே....

### தமிழரின் தலையாய பிரச்சனை?

● இவ்வருடம் அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனம் எத்தனை புதிய தமிழ்ப் படங்களை இறக்குமதி செய்தது, திரையிட்டது. இனி எவ்வளவு படங்களை திரையிடவுள்ளது? போன்ற விபரங்களை கூட்டுத்தாபன தலைவரிடம் தந்தி மூலம் கோரியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் கா. போ. இரத்தினம்

### பக்தி நெறி?

● சங்கானையில் ஆட்டுக்கடா வெட்டும் கோயில் வேள்விக்கு ஒலிபெருக்கி கொண்டு சென்ற இருபகுதி யாருக்கிடையில் யாருடைய ஒலிபெருக்கியின் ஓசை பெரியது என்ற போட்டியின் காரணமாக எழுந்த தகராறில் மூவர் பலத்த வெட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

### 'சாதி'த்த சாதனை?

● கைதடியில் சமீபத்தில் நடந்த சாதிக்கலவரத்தின் போது தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் தோட்டங்கள் பலவும் உயர்சாதி யென்று கூறப்படுபவர்களால் நாசமாக்கப் பட்டதுடன் அவர்களைக் கூலி வேலைக்கும் அமர்த்துவதில்லை யென்றும் கள்ளுத்தவறணைகளை பகிஷ்கரிப்பதாகவும் கூறப்படுகிறது.

### விளையாட்டுத்தனம்?

● ஏழாலையில் கரப்பந்தாட்டப் போட்டியொன்றில் கலந்துகொண்டு தோல்வியுற்ற கடற்படை வீரர்(?)கள் ஆட்டம் முடிந்ததும் கலாட்டா புரிந்தார்களாம் இதனால் பார்வையாளர்கள் கிலிகொண்டு ஓடியதால் பலர் காயமடைந்ததுடன் ஒரு கடையில் லாச்சியில் இருந்த பணமும் அபகரிக்கப்பட்டது. படைவீரர்கள் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனராம்—

# என்ன பொருத்தம் 'இ'ப்பொருத்தம்.

| | |
|---|---|
| உலகின் முதல் பெண்பிரதமர்— | இலங்கையின் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க |
| இரண்டாவது பெண்பிரதமர்— | இந்தியாவின் இந்திரகாந்தி |
| மூன்றாவது பெண்பிரதமர்— | இஸ்ரேலின் கோல்டா மெயர் |
| நான்காவது பெண்பிரதமர்— | இங்கிலாந்தில் தட்ச்சர். |

சகலவித இரும்புப் பொருட்களும்

வீட்டுத் தேவைகளுக்கும்

விஜயம் செய்யுங்கள்,

அப்துல்காதர் அன் பிறதர்

97, கே. கே. எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.



கிளிநொச்சியிலே....

பஸ் ஸ்ராண்ட் அருகிலே

❊ சேட்டிங் ❊ சூட்டிங்

✶ அழகு சாறிகள்

★ அலங்காரப்பொருட்கள்

யாவையும் பெற விஜயம் செய்யுங்கள்,

நியூ சரவணாஸ்

● பஸ் நிலையம் கிளிநொச்சி ●



யாழ்நகரிலே....

சகலவிதமான ஆடை அணிகலன்களுக்கு

விஜயம் செய்யுங்கள்.

லிங்கம் கவுஸ்

6, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.



A well wisher

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி கியூ 35/600


நூலுலகில் ஒரு காவிய நூல்

அழகை ஆராதனை செய்பவர்கள்

தமது சித்திரத் தையல்வேலைகட்குப் பாவிப்பது

## முயல் மார்க் நூலே!

Hey... Ganesh
Hey... Kumar





தயாரிப்பாளர்கள்:

# சம்பியன் திரெட்

# மனுபக்சரிங் கம்பனி.

கொழும்பு—12


559, கே. கே. எஸ் வீதி' யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 559, கே. கே. எஸ் வீதியில் உள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.